# அத்வைத மகரந்தம்



விளக்கி அருளியவர்

**பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகள்**

பேரன்புடன் வெளியிடுவோர்

**ஸ்ரீப்ரஜ்ஞா பப்ளிகேஷன்ஸ்**

வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட்,

வேதபுரீ, தேனி-625 531.

Email: swamiomkarananda@gmila.com www.vedaneri.org

புத்தகத்தின் பெயர் : அத்வைத மகரந்தம்

விளக்கவுரை : பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகள்

உரிமை : பதிப்பாசிரியர்

முதற்பதிப்பு : 07.07.2000
மொத்தப்பிரதிகள் : 1000

இரண்டாம் பதிப்பு : 01.09.2024
மொத்தப்பிரதிகள் : 1000

மொத்தப் பக்கம் : 96

பக்க அளவு : 1/8 டெம்மி

நன்கொடை : ரூ. 90/-

ஒருங்கிணைப்பு : ஸ்ரீஸ்வாமீ பூர்ணாநந்தர்

அச்சு ஒளிக்கோர்வை &
புத்தக அட்டைப்படம்
புத்தக வடிவமைப்பு : ஆ. சுந்தரராஜன்

Printing Support by : Alize Publishers
info@alizepublishers.com
www.alizepublishers.com

கிடைக்குமிடம்
ஸ்ரீஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்
வேதபுரீ, தேனி-625 531.

“

தன்னைப் பற்றிய உண்மையை
மனிதன் அறிந்துகொள்ள வேண்டும்.
அதை அறிந்து கொண்டவனுக்கு
வாழ்க்கையில் துன்பமில்லை.
தன்னைப் பற்றி அறிந்து கொள்ளும்
அறிவைப் பெறுதல் இன்றியமையாதது.
அந்த அறிவைப் பெற்றவன்,
தானே வணங்குதற்குரிய பெரிய
பொருளாக இருக்கும் நிலையை அறிவான்.

”

श्री लक्ष्मीधर कवि
विरचित

# अद्वैत मकरन्दः

कटाक्षकिरणाचान्तनमन्मोहाब्धये नमः।
अनन्तानन्दकृष्णाय जगन्मङ्गलमूर्तये ॥ (१)

अहमस्मि सदा भामि कदाचिन्नाऽहमप्रियः।
ब्रह्मैवाऽहमतः सिद्धं सच्चिदानन्दलक्षणम् ॥ (२)

मय्येवोदेति चिद्व्योम्नि जगद्गन्धर्वपत्तनम्।
अतोऽहं न कथं ब्रह्म सर्वज्ञं सर्वकारणम् ॥ (३)

न स्वतः प्रत्यभिज्ञानान्निरंशत्वान्नचाऽन्यतः।
न चाऽश्रयविनाशान्मे विनाशः स्यादनाश्रयात् ॥ (४)

न शोषप्लोषविक्लेदच्छेदाश्चिन्नभसो मम।
सत्यैरप्यनिलाग्न्यम्भः शस्त्रैः किमुत कल्पितैः ॥ (५)

अभारूपस्य विश्वस्य भानं भासन्निधेर्विना।
कदाचिन्नाऽवकल्पेत भा चाऽहं तेन सर्वगः ॥ (६)

नहि भानादृते सत्वं नर्ते भानं चितोऽचितः।
चित्सम्बन्धोऽपि नाध्यासादृते तेनाहमद्वयः॥ (७)

न देहो नेन्द्रियं चाऽहं न प्राणो न मनो न धीः
ममतापरिरब्धत्वादाक्रीडत्वादिदं धियः॥ (८)

साक्षी सर्वान्वितः प्रेयानहं नाऽहं कदाचन।
परिणामपरिच्छेदपरितापैरुपप्लवात्॥ (९)

सुप्तेऽहमि न दृश्यन्ते दुःखदोषप्रवृत्तयः।
अतस्तस्यैव संसारो न मे संसर्तृसाक्षिणः॥ (१०)

सुप्तः सुप्तिं न जानाति नाऽसुप्ते स्वप्नजागरौ।
जाग्रत्स्वप्नसुषुप्तीनां साक्ष्यतोऽहमतद्दृशः॥ (११)

विज्ञानविरतिः सुप्तिस्तज्जन्म स्वप्नजागरौ।
तत्साक्षिणः कथं मेस्युर्नित्यज्ञानस्य ते त्रयः॥ (१२)

षड्विकारवतां वेत्ता निर्विकारोऽहमन्यथा।
तद्विकारानुसन्धानं सर्वथा नाऽवकल्पते॥ (१३)

तेन तेन हि रूपेण जायते लीयते मुहुः ।
विकारिवस्तुनस्तेषामनुसन्धातृता कुतः ॥ (१४)

न च स्वजन्मनाशं वा द्रष्टुमर्हति कश्चन ।
तौ हि प्रागुत्तराभावचरमप्रथमक्षणौ ॥ (१५)

न प्रकाशेऽहमित्युक्तिर्यत्प्रकाशैकबंधना ।
स्वप्रकाशं तमात्मानमप्रकाशः कथं स्पृशेत् ॥ (१६)

तथाऽप्याभाति कोऽप्येषविचाराभावजीवनः ।
अवश्यायश्चिदाकाशे विचारार्कोदयावधिः ॥ (१७)

आत्माज्ञानमहानिद्राजृंभितेस्मिञ्जगन्मये ।
दीर्घस्वप्ने स्फुरन्त्येते स्वर्गमोक्षादिविभ्रमाः ॥ (१८)

जडाजडविभागोऽयमजडे मयि कल्पितः ।
भित्तिभागे समे चित्रे चराचरविभागवत् ॥ (१९)

चैत्योपरागरूपा मे साक्षिताऽपि न तात्त्विकी ।
उपलक्षणमेवेयं निस्तरंगचिदम्बुधेः ॥ (२०)

अमृताब्धेर्न मे जीर्णिर्मृषाडिण्डीरजन्मभिः ।
स्फटिकाद्रेर्न मे रागः स्वाप्नसन्ध्याभ्रविभ्रमैः ॥ (२१)

स्वरूपमेव मे सत्वं न तु धर्मो नभस्त्ववत् ।
मदन्यस्य सतोऽभावान्न हि सज्जातिरिष्यते ॥ (२२)

स्वरूपमेव मे ज्ञानं न गुणः स गुणो यदि ।
अनात्मत्वमसत्वं वा ज्ञेयाज्ञेयत्वयोः पतेत् ॥ (२३)

अहमेव सुखं नाऽन्यदन्यच्चेन्नैव तत्सुखम् ।
अमदर्थं न हि प्रेयो मदर्थं न स्वतः प्रियम् ॥ (२४)

नहि नानास्वरूपं स्यादेकं वस्तु कदाचन ।
तस्मादखण्ड एवास्मि विजहज्जागतीम्भिदाम् ॥ (२५)

परोक्षतापरिच्छेदशाबल्यापोह निर्मलम् ।
तदसीतिगिरालक्ष्यमहमेकरसंमहः ॥ (२६)

उपशान्तजगज्जीवशिष्याचार्येश्वरभ्रमम् ।
स्वतः सिद्धमनाद्यन्तं परिपर्णमहं महः ॥ (२७)

लक्ष्मीधरकवेः सक्तिशरदम्भोजसंभृतः ।
अद्वैतमकरन्दोऽयं विद्वद्भृंगैर्निपीयताम् ॥ (२८)

॥ समाप्तः ॥

ஸ்ரீ லக்ஷ்மிதர கவி

இயற்றிய

# அத்வைத மகரந்தம்

ாக்ஷகிரணாசாந்தநமந்மோஹாப்தயே நம: |
நந்தாநந்தக்ருஷ்ணாய ஜகந்மங்கலமூர்த்தயே || (1)

ஹமஸ்மி ஸதாபாமி கதாசிந்நாஹமப்ரிய: |
ஹ்மைவாஹமத:ஸித்தம் ஸச்சிதாநந்தலக்ஷணம் || (2)

யாவோதேதி சித்வ்யோம்நி ஜகத்கந்தர்வபத்தநம் |
தோ஽ஹம் ந கதம் ப்ரஹ்ம ஸர்வஜ்ஞம் ஸர்வகாரணம்|| (3)

ஸ்வத: ப்ரத்யபிஜ்ஞானாந்நிரம்சத்வாந்நசாந்யத: |
சாச்ரயவிநாசாந்மே விநாச:ஸ்யாதநாச்ரயாத் || (4)

சோஷப்லோஷவிக்லேதச்சேதாஸ்சிந்நபஸோ மம |
ரையைரப்யநிலாக்ந்யம்பசஸ்த்ரை: கிமுத கல்பிதை: || (5)

பாரூபஸ்ய விச்வஸ்ய பாநம் பா ஸந்நிதேர்விநா |
ாசிந்நாவகல்பேத பா சா஽ஹம் தேந ஸர்வக: || (6)

றி பாநாத்ருதே ஸத்வம் நர்த்தே பாநம் சிதோ஽சித: |
ஸம்பந்தோ஽பி நாத்யாஸாத்ருதே தேநாஹமத்வய: || (7)

தேஹோ நேந்த்ரியம் சாஹம் நப்ராணோ ந மநோ ந தீ: |
தாபரிரப்தத்வாதாக்ரீடத்வாதிதம் திய: || (8)

ஸாக்ஷி ஸர்வாந்வித: ப்ரேயாநஹம் நாSஹம் கதாசன |
பரிணாமபரிச்சேதபரிதாபைருபப்லவாத் || (9)

ஸுப்தேSஹமி ந த்ருச்யந்தே து:கதோஷப்ரவ்ருத்தய: |
அதஸ்தஸ்யைவ ஸம்ஸாரோ ந மே ஸம்ஸர்த்ரு ஸாக்ஷிண:|| (10)

ஸுப்த: ஸுப்திம் ந ஜாநாதி நாSஸுப்தே ஸ்வப்ந ஜாகரௌ |
ஜாக்ரத்ஸ்வப்நஸுஷுப்தீநாம் ஸாக்ஷ்யதோSஹமதத்ருச: || (11)

விஜ்ஞாநவிரதி: ஸுப்திஸ்தஜ்ஜந்ம ஸ்வப்நஜாகரௌ |
தத்ஸாக்ஷிண: கதம் மேஸ்யுர்நித்யஜ்ஞாநஸ்ய தே த்ரய: || (12)

ஷட்விகாரவதாம் வேத்தா நிர்விகாரோSஹமந்யதா |
தத்விகாரானுஸந்தாநம் ஸர்வதா நாSவகல்பதே || (13)

தேந தேந ஹி ரூபேண ஜாயதே லீயதே முஹு: |
விகாரிவஸ்துநஸ்தேஷாமநுஸந்தாத்ருதா குத: || (14)

ந ச ஸ்வஜந்மநாசம் வா த்ரஷ்டுமர்ஹதி கஸ்சந |
தௌ ஹி ப்ராகுத்தராபாவசரமப்ரதமக்ஷணௌ || (15)

ந ப்ரகாசேSஹமித்யுக்திர்யத்ப்ரகாசைகபந்தநா |
ஸ்வப்ரகாசம் தமாத்மாநமப்ரகாச: கதம் ஸ்ப்ருசேத் || (16)

ததாSப்யாபாதி கோப்யேஷவிசாராபாவஜீவந: |
அவச்யாயஸ்சிதாகாசே விசாரார்க்கோதயாவதி: || (17)

ஆத்மாஜ்ஞாநமஹாநித்ராஜ்ரும்பிதேஸ்மிஞ்ஜகந்மயே |
தீர்க்கஸ்வப்நே ஸ்புரந்த்யேதே ஸ்வர்கமோக்ஷாதி விப்ரமா: || (18)

ஜடாஜடவிபாகோSயமஜடே மயி கல்பித: |
பித்திபூகே ஸமே சித்ரே சராசாரவிபாகவத் || (19)

சைத்யோபராகரூபா மே ஸாக்ஷிதாSபி ந தாத்விகீ |
உபலக்ஷணமேவேயம் நிஸ்தரங்கசிதம்புதே: || (20)

அம்ருதாப்தேர்நமேஜீர்ணிர்ம்ருஷாடிண்டீரஜந்மபி: |
ஸ்படிகாத்ரேர்ந மே ராக: ஸ்வாப்நஸந்த்யாப்ரவிப்ரமை: || (21)

ஸ்வரூபமேவ மே ஸத்வம் ந து தர்மோ நபஸ்த்வவத் |
மதந்யஸ்ய ஸதோSபாவாந் ந ஹி ஸஜ்ஜாதிரிஷ்யதே || (22)

ஸ்வரூபமேவ மே ஜ்ஞானம் ந குண: ஸ குணோயதி |
அநாத்மத்வமஸத்வம் வா ஜ்ஞேயாஜ்ஞேயத்வயோ: பதேத்|| (23)

அஹமேவ ஸுகம் நாந்யதந்யச்சேந்நைவ தத்ஸுகம் |
அமதர்த்தம் ந ஹி ப்ரேயோ மதர்த்தம் ந ஸ்வத: ப்ரியம் || (24)

நஹி நாநாஸ்வரூபம்ஸ்யாதேகம் வஸ்து கதாசந |
தஸ்மாதகண்ட ஏவாஸ்மி விஜஹஜ்ஜகதீம் பிதாம் || (25)

பரோக்ஷதாபரிச்சேதசாபல்யாபோஹநிர்மலம் |
தஸீதிகிராலக்ஷ்யமஹமேகரஸம் மஹ: || (26)

உபசாந்தஜகஜ்ஜீவசிஷ்யாசார்யேச்வரப்ரமம் |
ஸ்வத: ஸித்தமநாத்யந்தம் பரிபூர்ணமஹம் மஹ: || (27)

பக்ஷ்மீதரகவே: ஸூக்தி சரதம்போஜஸம்ப்ருத: |
அத்வைத மகரந்தோSயம் வித்வத்ப்ருங்கைர்நிபீயதாம் || (28)

\- ஓம் -

ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:


# ஸ்ரீ ஸ்வாமி சித்பவாநந்த ஆச்ரமம்

**"வேதபுரி", சத்திரப்பட்டி ரோடு, தேனி–625 531.**

✆ 73908 e-mail:vedanta@md4.vsnl.net.in


---

## ஆசியுரை

அனைவருக்கும்

பரிபூரண ஆசிகள்

ஓம் நமோ நாராயணாய

சில ஆண்டுகளுக்கு முன் அடியேனால் ரிஷீகேசம் **ஸ்ரீ ஸ்வாமி தயாநந்த ஆச்ரமத்தில்** ஆன்மிக முகாம் ஒன்று நிகழ்த்தப்பட்டது. அதில் **ஸ்ரீ லக்ஷ்மீதரகவி** என்பவரால் இயற்றப்பட்ட **"அத்வைத மகரந்தம்"** எனும் வேதாந்த மனன நூலை விளக்கிக் கூறும் வாய்ப்பு குருவருளால் அமைந்தது. அதனைச் செவி மடுத்துப் பயனடைந்த சேலம் ஸ்ரீ சாரதா கல்லூரியின் முன்னாள் முதல்வர் **ஸ்ரீ சி.ரா. சகுந்தலா அம்மையார்** அவர்கள் தமக்கே உரித்தான தமிழ் நடையில் புத்தகமாக எழுதி அடியேனிடம் வழங்கியிருந்தார்கள். அதனை வெளியிடும் காலம் இப்பொழுதுதான் கனிந்து வந்தது.

வேதாந்த சாஸ்த்ரத்தை ஓரளவு நன்கு கற்று உணர்ந்தவர்களுக்கே இம்மனன நூல் பயன்படும். மெய்யன்பர்களுக்கு இந்நூல் நன்கு பயன்படும் என்று கருதி இதனை வெளியிடத் துணிந்தேன். கூறியது கூறல் சற்று மிகுதியாகத் தோன்றினும் **பொன்னைப் புடமிடும் ந்யாயத்திற்கொப்ப** இதனை ஏற்றுப் பயனடைய வேண்டுகிறேன்.

இந்நூல் வெளிவர உதவி புரிந்த அனைவருக்கும் எனது பரிபூரண நல்லாசிகள் என்றும் உரித்தாகும்.

ஓம் நமோ நாராயணாய
உளம் கனிந்த நல்வாழ்த்துக்கள்

அன்பன்

ஓங்காராநந்த

ஓங்காராநந்த
07-07-2000 வெள்ளி
வேதபுரி, தேனி.

# அத்வைத மகரந்தம்

## தோற்றுவாய்

நம் நாட்டின் மாபெரும் சிறப்பு ஆன்மிக வாழ்க்கையாகும். பொதுவாக உலகியல் வாழ்க்கை இன்பம், பொருள் ஆகியவற்றை நாடியதாக அமைந்துள்ளது.

பொருளுக்கும் இன்பத்திற்கும் அடித்தளமாக அறம் அமைந்திருக்க வேண்டும் என்பதனைத் திருவள்ளுவர் வகுத்த அறம், பொருள், இன்பம் என்ற முப்பாற் பாகுபாடு தெளிவாக்குகின்றது.

அறத்தின் அடிப்படையில் அமையும் வாழ்வுதான் சிறப்புக்குரியதாம். அறநெறி நின்று ஈட்டி பொருளும், அதன் வழிபெறும் இன்பமுமே அமைதியான நல்வாழ்வைத் தருவனவாகும்.

வாழ்க்கை அறம், பொருள், இன்பத்தைச் சார்ந்ததாயினும், ஆன்மிகத்தின் அடிப்படையில் அமையுமாயின் அது மேலும் சிறப்புக்குரியதாகின்றது. உலகியல் வாழ்க்கை வேறு ஆன்மிக வாழ்க்கை வேறு என்று எண்ணலாகாது.

இறை நம்பிக்கை, வினைப்பயன்களில்

நம்பிக்கை உடையராயிருத்தலே ஆன்மிக வாழ்வின் அடிப்படையாகும். ஆன்மிகம், வாழ்க்கையைப் பற்றிய உண்மைகளை உணர்த்துகின்றது. எனவே அந்நெறி நின்று வாழ்வோர் மன அமைதியைப் பெறுகின்றனர்.

ஆன்மிகத்தின் அடிப்படையில்தான் உலக வாழ்க்கை அமைய வேண்டுமென்பது நம் நாட்டுப் பண்பாடாகும். ஆன்மிக வாழ்க்கை என்றால் என்ன? "ஆத்மிகம்" "ஆத்யாத்மிக ஜீவனம்" என்ற ஸம்ஸ்க்ருதச் சொல்லும் தொடரும் "ஆன்மிகம்" "ஆன்மிக வாழ்க்கை" என்று தமிழ் மொழியில் வழங்கப்படுகின்றன.

நமது தர்ம ஸூத்திரங்களில் ஒன்று, "ப்ராம்ஹே முஹூர்த்தே உத்தாய சிந்தயேத் ஆத்ம ஹிதம்" என்று கூறுகின்றது. அதாவது "ப்ரஹ்ம முகூர்த்தமாகிய வைகறைப் பொழுதில் எழுந்து, நமக்கு ஹிதமான விஷயங்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்" என அறிகிறோம்.

நமக்கு நன்மையைத் தரும் நல்லெண்ணங்களையே எண்ணுதல் வேண்டும் என்று கூறுகின்றது. எல்லோரும் அவரவர்க்கு நன்மையைத் தருவனவற்றைத்தானே சிந்திக்கிறார்கள். உலகமே நடைமுறையில் அப்படித்தானே செயல்பட்டு வருகிறது.

இதிலென்ன புதிதாகச் சொல்லிப் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது என்று நாம் நினைக்கலாம். உண்மையிலேயே நமக்கு நல்லது எது என்பது பலருக்குத் தெரியாது. மனம் போன



போக்கிலெல்லாம் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அது நமக்கு நல்லது என்பது பொருளன்று.

நாம் நம் மனதை எவ்வாறு வைத்துக் கொள்ள வேண்டுமென்றும், இவ்வுலகில் நாம் எவ்வாறு வாழ்ந்தால் உண்மையான அமைதியையும், சாந்தியையும் பெறலாம் என்பதனையும் நம் சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

அவற்றை அறிந்து அதற்கேற்ற முறையில் இயங்குவது தான் ஆன்மிக வாழ்க்கையாகும்.

நம் அறிவு ஒரு எல்லைக்குட்பட்டது. நமது கருத்துக்கள், எண்ணங்கள், அபிப்ராயங்கள் மாற்றத்திற்குட் பட்டவை. அவ்வப்போது நமது அபிப்ராயங்களை மாற்றிக் கொண்டேயிருக்கிறோம்.

எனவே நம் அறிவு செறிவும், தெளிவும், உறுதியும் பெறுதற்கு நம்மினும் அறிவிற் சிறந்த சான்றோரின் உதவி தேவையாகின்றது. மக்களின் மெய்யறிவைத் தூண்டுதற்கு நம் முன்னோர்கள் எண்ணிறந்த சமய, இலக்கிய, தத்துவச் செல்வங்களை மனித சமுதாயத்திற்கு அளித்துச் சென்றுள்ளார்கள்.

அச்சான்றோர் கூறும் அறிவுரைகளையும் அற நெறிகளையும் நம் அறிவோடு இணைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நம் வாழ்வு வளம் பெறும்.

"மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதி நுட்பம்
யாஉள முன்நிற் பவை"



என்கிறார் திருவள்ளுவர்.

இயற்கையான நுண்ணிய அறிவோடு நூலறிவும் இணையுமிடத்துச் செயற்கரிய செய்யலாம் என்பது தெளிவாகின்றது.

வேத சாஸ்த்ரங்கள் வாழ்க்கைத் தத்துவங்களையும், இறைமைக் கோட்பாடுகளையும் எடுத்துரைக்கின்றன.

நாம் அறிய வேண்டிய சிறந்த கருத்துக்கள், மேற்கொள்ளவேண்டிய அறநெறிகள் ஆகியவற்றைக் கட்டளையிட்டுக் கூறி, நம்மைத் தீமைகளிலிருந்தும், துன்பங்களிலிருந்தும், காப்பாற்றுகின்றன.

வினைப்பயன்கள் நம்மைத் தாக்கும்போது, அவற்றை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தைத் தருகின்றன. நம் அறிவை வளர்த்துக் கொள்ளவும் உறுதுணையாகின்றன.

பகவத் கீதையில் கண்ணபிரான் அர்ஜுனனிடம் "செய்யத் தகுந்ததையும், செய்யத் தகாததையும் நிச்சயிப்பதில் சாஸ்த்ரம் உனக்குப் ப்ரமாணமாகிறது. இங்கு சாஸ்த்ரம் கட்டளையிட்டுச் சொல்வதை அறிந்து கர்மம் செய்யக் கடவாய்" என்று கூறுகின்றார்.

அறநூல்கள் செய்யத் தகுந்தவை, பேசத் தகுந்தவை, எண்ணத் தகுந்தவை யாவை என்று அறுதியிட்டுக் கூறுகின்றன. அவை உலகில் வாழ்வாங்கு வாழவும், அதற்கும் மேலாக வானோர்க்கும் உயர்ந்த உலகத்தை அடையும்

நெறிகளையும் எடுத்துரைக்கின்றன.

எனவே நம் அறிவை சாஸ்த்ரங்களோடு இணைத்துக் கொண்டால் நாம் தூய்மையுடையராய், குற்றங்கள் செய்வதினின்று விலகி வாழ இயலும். சாஸ்த்ரங்கள் மனோ தத்துவ அடிப்படையில் நடைமுறைக்கு ஏற்ற கருத்துக்களை எடுத்துரைக்கின்றன. உலகியல் வாழ்வை அவை ஒழுங்குபடுத்துகின்றன.

**சாஸ்த்ரம் ஜ்யோதி: ப்ரகாசார்த்தம் தர்சனம் புத்திராத்மன:।**
**தாப்யாம் நர: ஸ யுக்தாப்யாம் ப்ரயதோ நாபராத்யதி ॥**

சாஸ்த்ரம் விளக்கொளியாக இருக்க, நமது சுய அறிவு கண்ணாக அமைகின்றது. இவை இரண்டும் இணைந்தால்தான் பொருள்கள் விளக்கம் பெறுகின்றன.

சாஸ்த்ரங்கள் விளக்கொளியாக இருந்து, மனிதனின் அறிவுக்கு பல்வேறு செய்திகளை, கருத்துக்களைத் தருகின்றன. இதன் பயனாக அறியாமை இருள் நீங்கி அறிவுத் தூய்மை உருவாகின்றது. ஆயினும் அறிவு வளர்ச்சியால் மட்டுமே வாழ்க்கையில் முழுமையான மன அமைதியைப் பெற இயலாது. அத்தூய அறிவு நெறி நின்று வாழ வேண்டுமென்ற ஆவலும் தேவையாகின்றது.

"அர்ஜுனா, நம்பிக்கை இல்லாதவனிடம் இதனைச் சொல்லாதே" என்கிறார் கண்ணபிரான். சாஸ்த்ரத்தில் நம்பிக்கை, தன்னிடத்தில் நம்பிக்கை ஆகிய இரண்டும் இணைதல் வேண்டும். இதுவே ஆன்மிக வாழ்வின் அடித்தளமாகின்றது.



பரம்பொருள் அழிவற்ற உண்மைப்பொருள். உலக வாழ்வோ மாறிவரும் நிலையற்ற தன்மையுடையது. ஆயினும், பொதுவாக நாம் எது உண்மையோ, அழிவற்றதோ, ஆனந்தமயமானதோ அதனிடத்து நம்பிக்கை வைக்காது, அழியும் இயல்புடைய, மாறிவரும் தன்மையுடைய, துன்பந்தருவதாகிய உலகியல் பொருள்களிடத்து நம்பிக்கை வைத்துள்ளோம்.

பரம்பொருளிடத்து நம்பிக்கை ஊட்டும் சாஸ்த்ரங்களிடத்து நம்பிக்கை வேண்டும். நம்பிக்கை இல்லாவிடில் எத்துறையிலும் முன்னேற்றமில்லை. சாஸ்த்ரங் களிடத்து உள்ளார்ந்த ஆழமான நம்பிக்கை கொள்ளுமிடத்துத்தான் மனநிறைவையும், அமைதியையும் பெற இயலும்.

இத்தகைய நம்பிக்கை வடமொழியில் "ச்ரத்தா" என்று கூறப்படுகின்றது. ச்ரத்தை இருந்தால்தான் "மேதை" எனப்படும் மேலாம் அறிவாற்றல் வளரும். மேதை என்பது உயர்ந்த கருத்துக்களைக் கிரகித்து, உணர்ந்து மனதில் இருத்தி வைக்கும் தன்மையாகும்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

என்றார் வள்ளுவப் பெருந்தகை.

கற்கத் தகுந்த நூல்களை ஐயமறக் கற்க வேண்டும் கற்ற கல்விக்குத் தக்கவாறு அந்நெறியில் நிற்றல் வேண்டும் என்பதும் அறிவுறுத்தப்படுகிறது.

ஆன்மிக வாழ்க்கையில் இரண்டு படிநிலைகள் உள்ளன. அவை சமயம், தத்துவம் என்று பகரப்படுகின்றன. சமயம் பல்வேறு பிறவிகளைப் பற்றிப் பேசுகின்றது.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்

எனக் கூறிச் செல்கின்றார் மாணிக்கவாசகர்.

இறைவன் உலகத் தோற்றத்திற்குக் காரணமானவன், எல்லாம் தெரிந்தவன், எங்கும் நிறைந்தவன் எனப்போற்றுகிறோம்.

இறைவனை ஆண்டவனாகவும், நம்மை அடிமையாகவும் கொண்டு வழுத்துகிறோம்.

உள்ளத்தை ஒருமுகப்படுத்தவும், பக்குவப்படுத்தவும் சமயம் உறுதுணையாக அமைகின்றது. இறையுணர்வில் தோய்ந்திருக்கும் போது மன அமைதியைப் பெறுகின்றோம். இறை வழிபாட்டில் இறையன்பில் தோய்ந்திருந்து நம்மை மறந்து பேரின்பத்தில் திளைத்திருத்தலும் உண்டு.

இவ்வாறு உணர்ச்சிவழி நின்று பெறும் பேறுகளுக்கெல்லாம் எல்லை இருக்கின்றது. ஞான நெறி நின்று நாம் அதுவாயிருக்கும் பெருநிலையை அறிந்து கொள்ள வேண்டு மென்பது அத்வைத தத்துவத்தின் கோட்பாடாகும். எனவே சமயம் முதல் நிலையாக அமைய தத்துவம் இரண்டாவது நிலையாக அமைந்துள்ளது.



அத்வைத தத்துவம் ஆத்மாவிற்குப் பிறப்பு இறப்பு இல்லை. அது அழிவற்றது என்று கூறுகிறது.

ஜீவன், இறைவன் என்ற இரண்டற்ற நிலையை உணர்த்து கின்றது. "ஒன்றிரண் டெனாச் சமரச சொரூபசுகம்" என்று தாயுமானவர் கூறுவதும் இங்கு நினைக்கத்தக்க தாகும். வேதத்தின் ஞான காண்டமாகிய வேதாந்தம் எனப் படும் உபநிஷதங்கள் இக் கருத்தை உறுதியாக அறுதியிட்டுக் கூறுகின்றன. இந்நெறி முழுமையான துன்ப நீக்கத்திற்கு ஏதுவாகின்றது. தத்துவம் மானிட வாழ்வில் உண்மையை உணர்த்துகின்றது.

சர்ச்சுக்குள் பிறந்து சர்ச்சுக்குள்ளேயே இறந்து விடலாகாது என்று கூறுகின்றார் ஸ்வாமி விவேகாநந்தர். சமயத்திலிருந்து சமயாதீதத்திற்குச் செல்ல வேண்டும். சமயம் செடியைப் பாதுகாக்கும் வேலியைப் போன்றது.

இறைவனிடம் பக்தி செய்வதால் மனம் பக்குவப்படுகிறது. பின்னர் வாழ்க்கையைப் பற்றிய உண்மையை அறிந்து கொள்ளும் தகுதி வந்தமைகிறது.

சமய வாழ்வை மேற்கொண்டு, இறை நாட்டத்துடன் இறையருள் நாடி நிற்பவரே தத்துவத்தைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் படைத்தவராவார்.

சமய வாழ்வை மேற்கொள்ளாது அத்வைத தத்துவத்தை அறிய முற்படுதல் ஏற்புடையதன்று.



அது ஆபத்தானதாகுமென்று கூறுவர் சான்றோர்.

அத்வைத நெறியில்தான் ஆன்மிக வாழ்வு முழுமை பெறுகிறது என்பது வேதாந்தத்தின் கோட்பாடாகும் அத்வைத நெறியை மேற்கொள்வதென்பது சமயநெறியின் வழிபாட்டு முறைகளைப் புறக்கணித்தலன்று

அத்வைதம் புரிந்து கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

மனதில் அத்வைதத்தை நிலை நிறுத்த வேண்டும் செயலில் அத்வைதத்தைக் கொண்டுவரலாகாது செயலில் தர்மத்தைக் கொண்டு வர வேண்டும்.

செயல்கள் வாயிலாக உண்டாகும் விளைவுகள் நம்மைத் தாக்குமிடத்து. சமய நெறி நின்றால் இறைவனின் பெருந்திட்டம் என்றும் தத்துவ நெறியை மேற்கொள்ளு மிடத்து அவை மாயத்தோற்றம் என்றும் கருத வேண்டும்

அத்வைத தத்துவத்தை அறிந்துகொள்ள கீழ்க்கண்ட எடுத்துக்காட்டைக் காண்போம்.

ஒரு பெருங்கடல். கண்ணுக்கெட்டியவரை நீர்ப்பரப்பு விரிந்து காணப்படுகின்றது. அக்கடலின் ஒரு பகுதியை அலைகள் என்று கூறுகின்றோம்.

கடலும். அலைகளும் நீராலானவை என்பது வெளிப்படை எனவே கடலுக்கும். அலைகளுக்கும் இருப்பாக. அடிப்படையாக இருப்பது ஒரே பொருளாகிய நீர் என்பது தெளிவாகின்றது. கடலும் அலையும் இரண்டு பொருளாகக் காணப்பட்டாலும்



அடிப்படையில் ஒன்றாகின்றது.

அதுபோல, பரம்பொருளை யும், ஜீவனையும் இரு வேறு நிலைகளில் காண்கின்றோமாயினும், இரண்டிற்கும் இருப்பாக, அடிப்படையாக இருப்பது சைதன்யம். நாம் காணும் வேறுபாடுகள் மாயையால் உருவானவை.

மாயையே பரமனையும், ஜீவனையும் பிரித்துக் காட்டுகின்றது. ஜீவன் இறைவனைத் தேடிச் செல்லும் நிலை, அலை கடலை அல்லது நீரைத் தேடிச்செல்வதைப் போன்றது என்பதே வேதாந்தத்தின் கருத்தாகும்.

இக்கருத்து, மற்றோர் எடுத்துக்காட்டு வாயிலாகவும் விளக்கம் பெறுகின்றது. ஒரு பெரிய பாத்திரமும் அதனருகில ஒரு சிறிய கிண்ணமும் இருக்கின்றன.

இவை இரண்டினுள்ளும் இருக்கும் ஆகாசம் (இடைவெளி-Space) கடாகாசம் என்றும் சுற்றிலுமுள்ள ஆகாசமாகிய வெட்ட வெளி மஹாகாசம் என்றும் சொல்லப்படும். பாத்திரங்களுக்குள் இருக்கும் வெட்ட வெளியைச் சுருக்கியும், பெருக்கியும் காட்டியது அப்பாத்திரங்களின் வடிவங்கள்.

அவை, வேதாந்த சாஸ்த்ரத்தில் உபாதிகள் என அழைக்கப்டுகின்றன. ஒரே ஆகாசத்திற்கு இருவேறு வடிவங்களைக் கொடுத்து, வேறுபடுத்திக் காட்டியவை அதன் உபாதிகளாகின்றன.

இரண்டின் இருப்பும் ஒன்றேயாகும்.

மாயையால் பரம்பொருளினின்று வேறுபடுத்தப்பட்ட ஜீவனின் நிலையும் இதுவேயாகுமென்பதே வேதாந்தம் கூறும் செய்தியாகும். உபநிஷதங்கள் யாவும் "நீ ப்ரஹ்மமாக இருக்கிறாய்" என்ற கருத்தையே பல்வேறு வகைகளில் எடுத்துரைக்கின்றன.

உயிர்கள் அனைத்திற்கும் இருப்பாகவும், சுத்த சைதன்யமாகவும் இருக்கும் ப்ரஹ்மத்தை அறிபவன் ப்ரஹ்மமாகின்றான். இக் கொள்கையைப் புரிந்துகொண்டு சிந்தையில் இருத்தி வைத்துக் கொண்டபின்னரும், வ்யாவஹாரிக நிலையில், உலகியல் வாழ்வில் இறைவனை, த்வைதமாகக் கொண்டு வழிபாடுகள் செய்யலாம்.

ஸ்ரீ சங்கராச்சாரியார் உருவ வழிபாட்டைப் போற்றிப் புகழ்ந்து பல நூல்கள் இயற்றி உள்ளார் என்பது நினைக்கத்தக்கது.

ஒரே பொருளாக இருக்கும் சுத்த சைதன்யம் பல்வேறு வடிவங்களில் காட்சி தந்து அருள் செய்வதாகக் கொள்ள வேண்டும். த்வைதத்தில் அறநெறி நிற்றல் சிறப்பாக மேற்கொள்ள வேண்டிய வாழ்க்கை நெறியாகும். வாழ்வின் துன்பங்கள் தாக்கும்போது அத்வைத ஞானத்தை உறுதுணையாகக் கொள்ள வேண்டும்.

சமயத்தையும், தத்துவத்தையும் புகட்டும் வேதங்கள் அநாதியானவைகள். மாமுனிவர்கள் தம் தவ மகிமையால் இயற்கையில் யாண்டும் இருந்த அவ்வேதங்களைக் கண்டுணர்ந்து வெளிப்படுத்தினார்கள்.

அவை அகன்ற அறிவின் வெளிப்பாடாக அமைந்துள்ளன. மக்கட் ஸமுதாயம், அறநெறிகளையும் ஞான நெறிகளையும் அறிந்து கொள்ளப் பெரும் துணை புரிகின்றன. திருமூலரின் திருமந்திரத்தில் வேதச் சிறப்பு என்ற பகுதியில்,

**வேதத்தை விட்ட அறம் இல்லை வேதத்தின்**
**ஓதத் தகும் அறம் எல்லாம் உளதர்க்க**
**வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற**
**வேதத்தை ஓதியே வீடு பெற்றார்களே**

என்று கூறுவதும் இங்கு நினைக்கத்தகும்.

மக்கள் கற்றறிய வேண்டிய அறங்களெல்லாம் வேதங்களில் கூறப்பட்டுள்ளன. அவற்றிலும் சிறந்த அறநூல் வேறில்லை. அறிவுடைய பெருமக்கள் தர்க்க வாதங்களை விடுத்து, வளம் நிறைந்த வேதங்களைக் கற்றே வீடுபேறு எய்தினர் என்று திருமூலர் வேதங்களின் சிறப்பையும், வேதம் ஓதுவார் தம் சிறப்பையும் கூறுகின்றார்.

"ஆறங்கம் நால்வேதம் ஆனாய் நீயே" என்ற அப்பரடிகள் வாக்கிலும் வேதங்களின் சிறப்பைக் காண்கின்றோம். வேத சாஸ்த்ரங்களின் செல்வாக்கு, "அதென்ன வேதவாக்கா" என்று மக்களிடையே வழங்கப்படும் சொற்றொடராலும் அறியப்படுகிறது.

வேதங்களில் கர்ம காண்டம், ஞான காண்டம் என்ற இரு பகுதிகள் உள்ளன. பொதுவாக மக்கள் பொருளிலும், இன்பத்திலும் நாட்டமுடையவர்களாக உள்ளனர். அதற்கேற்ப, கர்மகாண்டம் சிறப்பாக கிரியைகளோடியைந்த வழிபாடு, வேள்வி



போன்றவற்றை நியமித்துள்ளது. அவற்றைச் செய்தால் துன்பம் நீங்கும், செல்வம் பெருகும், ஆயுள் வளரும் என்றும் கூறுகின்றது.

எனவே மக்கள் அந்நெறிகளை மேற்கொள்வதில் ஆர்வம் காட்டுதல் இயல்பேயாகும். இவை "காம்ய கர்மம்" அதாவது பயன் கருதிச் செய்யும் செயல்கள் எனப்படுகின்றன. ஆயினும், அச்செயல்களில் ஈடுபடும்போது இறைவனைச் சார்ந்திருந்து வாழ வேண்டும்.

நாள்தோறும் மூன்று முறை இறைவழிபாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் விரும்பிய பயன்களைப் பெறலாம் என்று வாழைப்பழத்துள் மருந்து வைத்துத் தாய் தன் குழந்தைக்குக் கொடுப்பது போல் வேதமாகிய தாய் செயற்படுகின்றாள்.

"ஜீவயாத்ரா" என்ற நூலுள் ஸ்ரீஞானாநந்த பாரதி ஸ்வாமிகள் கூறுவதும் இங்கு நினைக்கத்தகும்.

**"ஆஸ்திக்யம் த்ருடமூலமேவ மனுஜ: ஸம்பாதயத்வாதித:**
**கர்மாசாரயுதஸ்ததஸ்ச பவது ஸ்வர்காதிபோகேச்சயா**
**ஸ்வர்காதாவபி ச க்ரமேணகமிதோ நைராச்யமேவாஸ்திரே**
**நித்யாநித்யவிசாரணே ஸ்வதிக்ருதஸ்தத்வம் ஸமன்விச்சது"**

முதலில் மனிதன் வேதங்களில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவனாக விளங்க வேண்டும். பிறகு அதற்கேற்றபடி ஸ்வர்க்கம் முதலான உலக இன்பங்களில் ஆர்வம் உடைவனாகச் செயல்களை நன்கு ஆற்ற வேண்டும்.

காலப்போக்கில் நிலையில்லாத ஸ்வர்க்கம் முதலான இன்பங்களிலும் பற்றற்றவனாய் நிலைத்தது

எது? நிலையில்லாதது எது? என்ற விவேகம் உடையவனாய் மெய்ப்பொருளை நாடுதல் வேண்டும் என்றார்.

இக்கருத்திற்கேற்ப, "காலப்போக்கில் இன்றிருந்து நாளை மறையும் உலகியல் இன்பங்களையும், பொருள்களையும் நாடிச் செல்கின்றோமே" என்ற எண்ணம் தோன்றும்.

மேலும் இவ்வுலக இன்பங்கள் மன அமைதியைத் தருவனவல்ல என்பதும் அறிய வருகின்றது. எனவே செய்யும் செயல்களைச் சிறிதும் பயன் கருதாது, இறைவனுக்கு அர்ப்பணமாகச் செய்தல் வேண்டும் என்ற "கர்மயோக" நெறியை மேற்கொள்ளும் மனப்பக்குவம் உண்டாகின்றது.

கர்மயோகம் விருப்பு, வெறுப்பைப் போக்கி மனத்தூய்மையை அளித்து, நிலையாமையை நன்கு உணர்த்துகின்றது. விவேக, வைராக்யத்தை நிலைக்கச் செய்கிறது. சிறிய வட்டமாகிய தனிமனிதனுக்குரிய கடமைகளுடன், பெரிய வட்டமாகிய சமுதாயக் கடமைகளையும் பயன்கருதாது தொண்டுள்ளத்துடன் மேற்கொள்ளும் மன நிலை உண்டாகிறது.

செய்யும் செயல்கள் அனைத்தையும் இறைவழிபாடாகச் செய்யுமிடத்து இறை நாட்டம் மேலோங்குகின்றது. இந்நிலையில் விருப்பமான தெய்வ உருவத்தை உள்ளத்திருத்தி, த்யானம் செயதல் இடம் பெறுகின்றது. இது "ஏக ரூப த்யானம்" எனப்படுகிறது.

இந்த த்யானம் மன ஒருமுகப்பாட்டை வளர்க்கின்றது. அடுத்து, இறைவன் எங்கும்

நிறைந்திருக்கின்றான். மலைகளாகவும், ஆறுகளாகவும், கடலாகவும் காட்சி தருகின்றான். மரங்களாகவும், செடி கொடிகளாகவும் தோற்றமளிக்கின்றான். எல்லா உயிரினங்களிலும் உயிர்க்குயிராய்த் திகழ்கின்றான். மக்கள் எல்லோர் உள்ளங்களிலும் வீற்றிருக்கின்றான் என்று த்யானம் செய்தல் "அநேக ரூப த்யானம்" எனப்படும். இது "விச்வரூப த்யானம்" என்றும் பகரப்படும்.

இந்த த்யானம் மனம் பரந்து விரிந்து செயல்படவும் மக்கள் எல்லோரையும் விருப்பு வெறுப்பின்றி ஏற்றுக் கொள்ளவும் ஏதுவாகின்றது. ஆயினும் நல்லாருடன் ஒட்டி உறவாடலாம், அல்லாரிடம் வெறுப்பில்லாமல் இருக்கலாம்.

இத்தகைய மனப்பக்குவத்தைப் பெற்ற பின்னர், தகுந்த குருவை நாடிச் சென்று ஆத்மாவைப் பற்றிய உண்மை, உலகைப் பற்றிய உண்மைகளை அறிந்து கொள்ள வேண்டும். அதுவே ஞானகாண்டம் கூறும் செய்தியாகும்.

தக்க குருவைச் சார்ந்து பணிந்து வணங்கி உண்மையை அறிய முற்படல் வேண்டும். கண்ணன் கீதையில் "பணிந்தும் கேட்டும் பணிவிடை செய்தும் நீ அதை அறிக. உண்மையை உணர்ந்த ஞானிகள் உனக்கு அந்த ஞானத்தை உபதேசிப்பார்கள்" என்று குருவை நாடிச் செல்லும் சீடன் மேற்கொள்ள வேண்டிய நெறியைக் கூறுகின்றார்

வேதாந்தம் கூறும் ஞான நெறி "உன்னை நீ அறிவாயாகில் உனக்கொரு கேடுமில்லை" என்று துவங்கிப் பேசுகின்றது. உண்மையை அறிந்து



கொள்ளத்தான் முடியும். உண்மையான ஆனந்தத்தை அடைய முடியாது. அடையப்படுபவை அனைத்தும் அழியும் தன்மை உடையவை. வந்து சேருபவை அனைத்தும் ஒரு காலத்தில் நீங்கி விடும். துன்பப்படும்போதும் நாம் ஆனந்த ஸ்வரூபமே என்பது வேதாந்தத்தின் கோட்பாடாகும்.

ஆயினும் துன்பத்தை அனுபவிப்போர்க்கு அது தெரிவதில்லை. அறியாமையால் உலக இன்பத்தையும், துன்பத்தையும் உண்மை என்று நம்புகிறோம்.

ஆனந்த வடிவமாக இருந்து கொண்டே நாம் துன்பப்படுவதாக தவறாகக் கூறுகிறோம். ஆனந்த வடிவமாகவே நாம் இருக்கிறோம் என்றால் அது ஏன் நமக்குத் தெரியவில்லை என்ற வினா எழுகின்றது. "தெரியவில்லையே" என்ற கூற்றிலிருந்து அது இருக்கிறது, என்பது பெறப்படுகின்றது. அதைத் தெரிவிக்கத்தான் ஞான யோகம் அமைந்துள்ளது.

உலகை உண்மை என்று நம்பிக் கொண்டிருக்கிறவரை நிலையான ஆனந்தத்தைப் பெற இயலாது. ஒரு பொருளின் இயல்பு எதுவோ அதுதான் நிலைத்திருக்கும். எது வந்து சேருமோ அது மறைந்து போகும்.

தீயின் இயல்பு சுடுதல், எனவே அது தீயினிடம் நிலைத்திருக்கும். வெந்நீரில் ஏற்றப்பட்ட சுடும் தன்மை நிலைத்திருப்பதன்று. அது போன்று, நித்யமான இன்பம் வேண்டுமாயின், அது ஏற்கனவே இருக்க வேண்டும் என்பது வேதாந்தத்தின் கோட்பாடாகும். துன்பத்திலிருந்து நம்மை நாம்



விலக்கிக் கொள்ள வேண்டும். துன்பத்தின் பிணைப்பு எத்தகையது என்பதை கீழ்வரும் நிகழ்ச்சியால் அறியலாம்.

கங்கைக் கரையில் துறவியர் இருவர் அமர்ந்திருந்தனர். ஆற்றில் ஒரு கம்பளி அடித்துச் செல்வதைப் பார்த்தனர். அதை எடுத்துவர ஒருவர் ஆற்றில் இறங்கிச் சென்று அதனைப் பற்றினார். அது அவரையும் இழுத்துச் சென்றது.

அதைக் கண்ட கரையில் இருந்த துறவி "அதனை விட்டு விடு" என்று கூறினார்.

"நான் விட்டாலும் அது என்னை விடாது இழுக்கின்றது." என்றார் ஆற்றில் சிக்கிய துறவி.

அவர் பற்றிப் பிடித்தது ஒரு கரடியாதலால், அது அவரையும் சேர்த்து இழுத்துச் சென்றது. மக்கள் உலகியல் பொருட்களைப் பற்றிப் பிடித்துள்ள நிலை இத்தகையதென்பது அறியலாகிறது.

வேதாந்தக் கோட்பாடுகளை விளக்கும் உபநிஷதங்களை குரு முகமாக முறையாகப்படிக்க வேண்டும். உலகின் தன்மையையும், உண்மையான ஆனந்தத்தின் இருப்பையும் அவை எடுத்துரைக்கின்றன.

ச்ரவணம் என்பது முறையாகக் கேட்டறிதலைக் குறிக்கின்றது. "இதுவரை கடவுள் வேறு நீ வேறு என்றும் இறைவனை ஆண்டவனாகவும் உன்னை அடிமையாகவும் கொண்டு வழிபட்டு வந்தாய். உன் மனத்தைப் பக்குவப்படுத்து வதற்காக நானும் அந்நெறியையே உனக்குக் காட்டிக் கொடுத்தேன்"

என்று கூறிய குரு அடுத்து ஞான நெறியை நேர்முகமாகப் புகட்டுகின்றார்

அத்வைதக் கோட்பாடு விளக்கப்படுகிறது. "நீ வேறு கடவுள் வேறு அல்ல. நீ துக்க வடிவம் அல்ல. நீயே ப்ரஹ்மம்தான். உனது ஆத்மா ப்ரஹ்மத்துக்கு வேறாக இல்லை. பேருணர்வுதான் பரம்பொருள்" என்று கூறுகின்றார்

இவ்வாறு முறையாக சாஸ்த்ரங்களைக் குரு முகமாகக் கேட்பதால், ப்ரமாணமாகிய சாஸ்த்ரங்கள் என்ன கூறுகின்றன என்ற அறியாமை அகலுகின்றது. இவ்வாறு ப்ரமாண அஸம்பாவனை நீங்குகிறது. அடுத்து இவ்வாறு அறிந்து கொண்ட செய்திகளிலும் பல்வேறு ஐயங்கள் தோன்றுகின்றன.

அதாவது, "நான் ப்ரஹ்மம் என்பதனை எப்படி ஏற்றுக் கொள்ள இயலும்? எந்த அடிப்படையில் கூறுகிறீர்கள்?" என்ற வினாக்கள் உள்ளத்திலே எழுகின்றன. சந்தேகமிருக்குமிடத்தில் விசாரணை செய்ய வேண்டும் சந்தேகங்களை வளர்க்கலாகாது.

பொதுவாக எல்லாப் ப்ரச்சினைகளுக்குமே காரணம் சந்தேகங்கள் தெளிவுபடுத்தப்படாமல் இருப்பதேயாகும். தெளிவு படுத்தப்படாதவரை சந்தேகங்கள் நீங்குவதில்லை. சிந்தித்தல் அல்லது விசாரணை செய்வதால் அறியாமை நீங்கித் தெளிவு ஏற்படுகின்றது.

இந்நிலை "ப்ரமேய அஸம்பாவனை நீக்கம்" எனப்படுகிறது இத்தகைய சந்தேகத்தை நீக்கும் மனனக்கிரந்தமாக இருக்கும் நூல்களுள் ஒன்று



அத்வைத மகரந்தம் என்பதாகும்.

## விளக்கவுரை

அத்வைதமாம் பூம்பொடியாகிய இந்நூல் "நான் ப்ரஹ்மமே'' என்ற கருத்தை பல்வேறு கோணங்களில் சான்றுகளுடன் நிறுவுகின்றது. உபநிஷதங்களாகிய மலர்களிலிருக்கும் தேன் போன்ற கருத்துக்கள் இங்கு சொல்லப்படுகின்றன.

அத்வைத தத்துவத்தைப் புகட்டும் இந்நூல் ப்ரஹ்ம ஸ்வரூபமாகிய தேனைத் தருகின்றது. மனிதனுக்குத் தேன் இன்பம் தருவதுபோல் இந்நூல் வாழ்க்கையின் உண்மையைப் பற்றி அறிய விரும்புவோர்க்கு உண்மையான ஆனந்தத்தையும் அமைதியையும் விளங்கவைக்கிறது.

இந்நூலை இயற்றியவர் ஸ்ரீ லக்ஷ்மிதரகவி என்னும் சான்றோர். இவர் பதினேழாம் நூற்றாண்டில் ஒரிசா மாநிலத்தில் பூரி ஜெகந்நாதம் என்னும் ஊரில் பிறந்தவர். அரசவையில் அரசுகவி என்ற சிறப்புக்குரியவராகத் திகழ்ந்தார்.

இல்லறத்திலிருந்து பின்னர் துறவு நெறியை மேற்கொண்டு க்ருஷ்ணானந்தகிரி என்ற திருநாமத்திற்குரியவரானார்.

இவரது வழிபாட்டுத் தெய்வம் கண்ணபிரான். அனந்தானந்தகிரி என்பவர் இவரது குருவாக விளங்கியவர்.

மேலும் இறைவனது நாமத்தை உச்சரிப்பதால் உண்டாகும் பயனை விளக்கும் "பகவன் நாம



கௌமுதி" என்ற நூலையும் இயற்றியுள்ளார்.

அத்வைத மகரந்தமாகிய இந்நூலுக்கு ஸ்வயம்ப்ரகாசயதி என்பவர் எளிமையான அழகிய உரை இயற்றியுள்ளார் என்பதும் இங்கு நினைக்கத்தகும்.

இந்நூல் நுவலும் பொருள் யாது? இந்நூலைக் கற்கத் தகுதியுடையவர் யார்? இந்நூலைக் கற்பதால் ஏற்படும் பயன் என்ன என்பவை அறியத்தக்கவையாகும். இறை நம்பிக்கை உடையவர்களும், உபநிஷதங்களைக் கற்றவரும் இந்நூலாராய்ச்சிக்குரியவராவர்.

இந்நூல் "நான் ப்ரஹ்மமாக இருக்கிறேன்" என்ற அத்வைதக் கருத்தை, இரண்டற்ற நிலையை பல்வேறு சான்றுகளைக் கொண்டு நிறுவுகின்றது. இதன் வாயிலாக சந்தேகமில்லாத தெளிந்த அறிவு உண்டாகிறது.

இந்நூலைக் கற்கும் மாணவன், உபநிஷதங்கள் "நான் ப்ரஹ்மம்" என்று கூறுகின்றன. ஆயினும் "நான் ப்ரஹ்மம்" என்ற கருத்தை ஏற்றுக் கொள்ள இயலாத நிலையில் இருக்கின்றான்.

நானும் ப்ரஹ்மமும் எப்படி ஒன்றாக முடியும் என்ற வினாவை எழுப்புகிறான். இந்நூல் பல ந்யாயங்களை எடுத்துக் காட்டி அவனது ஐயத்தைப் போக்குகின்றது.

இந்நூலில் முதற் செய்யுள் காப்புச் செய்யுளாக அமைந்துள்ளது. அது மங்கல ச்லோகம் என்று கூறப்படுகின்றது.



கடாக்ஷகிரணாசாந்தநமந்மோஹாப்தயே நம: ।
அநந்தாநந்தக்ருஷ்ணாய ஜகந்மங்கலமூர்த்தயே ॥

(ச்லோகம்-1)

பொதுவாகக் காப்புச் செய்யுள் மூன்று நிலைகளில் அமைவது மரபு.

இறைவனின் இலக்கணம் கூறுவதாக அமையும். "அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" என்ற குறட்பா இங்கு நினைக்கத்தகும். இது "வஸ்து நிர்தேச சொரூப மங்கள ச்லோகம்" என்று கூறப்படுகின்றது.

இரண்டாவதாக, இவ்வுலகம் வளமுடன் வாழ வேண்டும் என்று இறையருளை வேண்டுவதாக அமைவதாகும். இது "ஆசீர்வாத ரூப மங்கள ச்லோகம்" என்று அழைக்கப்படுகின்றது. மூன்றாவதாக எடுத்துக்கொண்ட செயல் தடைகள் ஏதுமின்றி நன்கு நிறைவேற வேண்டும் என்று இறைவனை வணங்கும் நிலையில் அமைந்திருக்கும். இது "நமஸ்கார ரூப மங்கள ச்லோகம்" என்படுகிறது.

கடைக்கண் ஒளிக்கதிர்களால் தன்னை வணங்குகின்றவரின் அறியாமை என்னும் கடலை வற்றச் செய்து, உலகம் அனைத்திற்கும் நன்மையையும், ஆனந்தத்தையும் தருகின்ற குருநாதனுக்கும், க்ருஷ்ண பரமாத்மாவின் திருவடிகளுக்கும் உளங்கனிந்த வணங்கங்கள் என்றார்.

கருணையால் தனது மயக்கங்களை அகற்றியுள்ளனர் எனப்போற்றுகின்றார். "நான்



ப்ரஹ்மம்" என்ற அத்வைத தத்துவத்தைக் கூறத் தொடங்கிய ஆசிரியர் தனது வழிபடு தெய்வத்தை வணங்குகிறார். நாம ஜபத்தின் பெருமையை "விளக்கும் பகவன் நாம கௌமுதி" என்ற நூலை இயற்றியுள்ளார் என்பதையும் கண்டோம்.

அத்வைத தத்துவத்தைப் போற்றிப் பரப்பிய ஸ்ரீ சங்கராச்சாரியாரும் சௌந்தர்யலஹரி, சிவாநந்தலஹரி போன்ற பக்தியின் ஆழத்தை அறியவைக்கும் நூல்களை இயற்றியுள்ளார் என்பதும் நினைக்கத்தக்கது.

வேதாந்தம் பாரமார்த்திக ஸத்யம், வ்யாவஹாரிக ஸத்யம் என்ற இரு நிலைகளைக் கூறுகின்றது. வ்யாவஹாரிக ஸத்யம் என்பது நாம் அனைவரும் அநுபவிக்கும் இவ்வுலக வாழ்க்கையைப் பற்றியது. பாராமார்த்திக ஸத்யம் எனப்படுவது இந்த வ்யாவஹாரியத்திற்கும் அடிப்படையாக இருக்கும் மெய்ப்பொருளைப் பற்றியது. மனதில் பரிபூர்ணமான அத்வைத தத்துவத்தை இருத்தி, வ்யவஹாரத்தில் இறைபக்தியுடன் வாழவேண்டும் என அறிகின்றோம்.

அறிந்ததைக் கொண்டு அறியாததை அறிதல் என்பதற்கேற்ப உருவ வழிபாட்டிலிருந்து அருவ வழிபாடு அறியப்படுகின்றது.

"த்வைதமே அத்வைத ஞானத்தை உண்டு பண்ணும்'' என்றார் தாயுமானவர். எனவே அத்வைத தத்துவத்தைப் போற்றும் சான்றோர் அனைவரும் த்வைத நெறியையும் வ்யாவஹாரிக

ஸத்யம் என்ற நிலையில் போற்றியுள்ளனர் என்பதை அறிகிறோம்.

இவை முரண்பட்ட நிலைபோல் காணப்படினும், அவை முரணுடையவை அல்ல. உண்மையை உணர்ந்தோர் மேற்கொள்ளும், மேற்கொண்டி ருக்கும் நெறியேயாகும்.

வழிபாடுகளும், த்யானமும் மனதைப் பக்குவப்படுத்துதற்குத் தேவையாகின்றன. த்வைத வ்யவஹாரம் நம் மனதை பாதிக்காமல் இருப்பதற்கு அத்வைத ஞானம் உறுதுணை யாகின்றது.

உலகியல் வாழ்வில் எத்தனை எத்தனையோ துன்ப துயரங்கள் வந்து சேர்கின்றன. அத்வைத ஞானம் நல்லதைப் பார். தீயனவற்றைப் பற்றிக் கவலைப்படாதே என்று புகட்டுகிறது. சித்தர் ஒருவர் உடல் வாழ்க்கையைப் பற்றிக் கூறும்போது,

**நந்தவனத்தில் ஓர் ஆண்டி—அவன்**
**நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி**
**கொண்டுவந்தான் ஒரு தோண்டி — அதைக்**
**கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி**

என்று பாடுகிறார்.

இறையருளால் கிடைக்கப்பெற்ற உடலைப் பாழ்படுத்திக் கொள்ளலாகாது. உலகம் உண்மையிலேயே நந்தவனம். அதனை துக்கவனம் ஆக்கிக் கொள்ளாதே துன்பங்கள் இருக்கலாம். ஆயினும் அறிவு வாயிலாக விசாரணை செய்து, அதனைப் பொருட்படுத்தாதிருந்து பழக வேண்டும்.

"நாள் தோறும் நூற்றுக்கணக்கான துன்பங்கள்.



அச்சங்கள் மூடனுள் சென்று நுழைகின்றன. ஞானியைச் சென்றடைவதில்லை" என்ற கூற்றும் இங்கு நினைக்கத்தகும் மூடன் துன்பங்களை உள்ளே நுழைய விடுகிறான் என்பது குறிப்பிடத்தக்கது.

**வெள்ளத்தனைய இடும்பை அறிவுடையான்**
**உள்ளத்தில் உள்ளக் கெடும்**

என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

துன்பங்களைப் பற்றி அறிவு வழி நின்று ஆழ்ந்து சிந்திக்குமிடத்து, அவை வந்த வழிகூடத் தெரியாது மறைந்துவிடும் என அறிகின்றோம்.

சமய நெறி நின்று துன்பங்கள் யாவும் இறைவனின் பெருந்திட்டத்தில் இடம்பெற்றவை என்ற எண்ணமும், தத்துவ நெறிநின்று உலக வாழ்வு கானல் நீர் கனவு போன்றவை என்று அதன் நிலையற்ற தன்மையை அறிந்து கொள்வதும், துன்ப நீக்கத்திற்குரியனவாகும்.

நாம் இவ்வுலகில் பெறும் இன்பமானது இடத்தால் காலத்தால், பொருளால் வரையறுக்கப்படு கின்றது. அந்த ஆனந்தமானது வந்து வந்து போகும் ஆனந்தமாக இருப்பதால், அதை அறிந்து கொண்டு உண்மையான இன்பத்தை குருவின் வாயிலாக அறிய வேண்டும். இறைவனே குருவாக வந்து அருள் செய்ததாகச் சான்றோர் கூறுவதும் நினைக்கத் தக்கது.

"ஆதி அநாதியுமாகி — எனக்கு
ஆனந்தமாய் அறிவாய் நின்றிலங்கும்
ஜோதி மவுனியாய்த் தோன்றி—அவன்
சொல்லாத வார்த்தையைச் சொன்னாண்டி தோழி"

என்றார் தாயுமானவர்

"ஈறிலாத எளியையாகி வந்தொளி செய் மானுடமாக நோக்கியும்" என்று போற்றுகின்றார் மாணிக்கவாசகர் இந்நூலாசிரியர் வரையறுக்கப்படாத ஆனந்தத்தைக் கொடுத்த தனது குருவையும், வழிபடு தெய்வமாகிய கண்ணபிரானையும் வாழ்த்தி வணங்குகின்றார்.

மோஹம் என்னும் கடலை வற்றச் செய்தவர் எனப் போற்றுகின்றார். முழுமை இல்லாதனை முழுமை என்றும் நிலையில்லாதவற்றை நிலையானவை என்றும். பயனற்றவற்றை பயனுடையவை என்றும். இன்பமற்றவற்றை இன்பமென்றும் எண்ணுவது மோகமெனப்படும்.

மோஹமாகிய அறியாமையை நீக்கி விருப்பு. வெறுப்புக்களிலிருந்து விலகியிருத்தல் ஆன்மீக வாழ்க்கைக்குரிய நெறியாகின்றது.

ஆத்மபோதம் என்னும் நூல் இராமாயணத்தை மிகச் சுருக்கமாக. மோஹம் என்னும் கடலைக் கடந்து. விருப்பு. வெறுப்பு முதலான அரக்கர்களை அழித்து அமைதி என்ற மனைவியை அடைந்தான். ஆத்மாராமன் என்று கூறுகின்றது.

"மோஹத்தைக் கொன்றுவிடு அல்லாலென்றன் மூச்சை நிறுத்திவிடு" என்னறார் பாரதியார்.

மோகமாகிய கடல் காமம், குரோதம், லோபம், மதம் முதலான அலைகளைக் கொண்டதாகும், இவையாவும் மோகத்தின் வலிமையை உணர்த்துகின்றன.

இத்தகைய மோகக் கடலைக் கடக்க, அதாவது உள்ளத்தில் உருவாகும் மயக்கங்களை அகற்ற இறையருளும், குருவருளும் இன்றியமையாதவையாகின்றன. எனவே இந்நூலாசிரியர், இறைவன், குரு ஆகியோர் தமது கடைக்கண் பார்வை என்ற ஒளிக்கதிர்களால் அக்கடலை வற்றச் செய்தனர் என்று போற்றுகின்றார்.

**''கடாக்ஷகிரணம்'' என்ற தொடர், கடைக்கண் பார்வையாகிய ஒளிக்கதிர்கள் இறையருளையும் அதனின்று பெறும் குரு அருளையும், அதன் விளைவாக ''அஹம் ப்ரஹ்மாஸ்மி'' என்ற எண்ணத்தில் ஒளிரும் ப்ரதிபிம்ப சைதன்யமாகிய வ்ருத்திக்ஞானத்தையும் வழங்கும் வான் கருணை உடையவை என்பதனை விளக்குகின்றது.**

அறிந்ததைக் கொண்டுதான் அறியாததை அறிய இயலும். அதற்கேற்ப உருவ வழிபாடு வழி நின்று, கண்ணிபிரானை வணங்கி, அவன் அருள் பெற்றுப் பின்னர் உள்ளத்தில் சைதன்யரூபமாக இருக்கின்ற பரம்பொருளை அறிய முயலும் நெறி இங்கு அறியலாகின்றது.

அடுத்து, நான் சச்சிதானந்த வடிவமாகிய ப்ரஹ்மமே தான் என்பது கூறப்படுகிறது.



அஹமஸ்மி ஸதாபாமி கதாசிந்நாஹமப்ரிய: |
ப்ரஹ்மைவாஹமத:ஸித்தம் ஸச்சிதாநந்தலக்ஷணம் ||

(ச்லோகம்-2)

நான் யாண்டும் இருக்கிறேன். யாண்டும் ஒளிர்கின்றேன். உணர்வு மயமாக இருக்கின்றேன். ஒருபொழுதும் நான் என்னிடம் அன்பில்லாதவனாக இல்லை. ஆகையால் நான் சச்சிதானந்த லக்ஷணம். இருப்பு. உணர்வு. இன்ப இலக்கணமாக இருக்கின்ற ப்ரஹ்மமேதான் என்பது நிரூபணமாகின்றது.

நான் எப்பொழுதும் இருக்கின்றேன் என்பதனை உணர்கின்றேன். எனக்கு என்னிடம் மிகவும் அன்புள்ளது. இருக்கின்றேன் என்ற இருப்பு சத்தாகவும், இருக்கிறேன் என்ற உணர்வு சித்தாகவும் என்னிடம் உள்ள மிகுந்த அன்பு ஆனந்தமாகவும் இருப்பதால் நான் சச்சிதானந்த வடிவம் என்பது அறியலாகிறது.

இது அறிவினால் அறிந்து கொள்ள வேண்டிய கருத்தாகும். அறிவினால் உண்டாகும் இன்பத்திற்கு நிகர் வேறில்லை. அறிவு நெறி நின்று அடையும் ஆனந்தத்தைப் பற்றித் தாயுமானவரும்,

"அன்றேன்னும் ஆமென்றும் உண்டோ — உனக்கு
ஆனந்தம் வேண்டின் அறிவாகிச் சற்றே
நின்றால் தெரியும் எனவே — மறை
நீதி எம் ஆதி நிகழ்த்தினான் தோழி"

என்று தனது குருநாதர் தனக் குரைத்ததாகக் கூறுகின்றார்.



சச்சிதானந்த வடிவமாகிய நான் ஒரு காலத்தில் தோன்றி, ஒரு காலத்தில் அழிபவன் அன்று. சச்சிதானந்தம் என்ற சொல்லுக்கு எதிர்மறைச் சொல் "அந்ருத ஜட துக்கம்" எனப்படுகின்றது.

நாம் அனுபவிக்கும் உலகம். உடல். மனம். புத்தி ஆகியவை இருப்பில்லாதவை. அழியும் தன்மையுடையவை. அறிவற்றவை (ஜடம்) துக்க வடிவமானவை. எனவே. இவை "அந்ருத ஜட துக்கம்" எனக் கூறப்படுகின்றன. இவைகளுக்குச் சாட்சியாக இருக்கிற நான் சச்சிதானந்த சொரூபம். இறந்த காலம். நிகழ் காலம். எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களிலும் நான் இருக்கிறேன்.

நனவு. கனவு. உறக்கம் ஆகிய மூன்று நிலைகளிலும் நான் இருக்கிறேன். நனவிலும். கனவிலும் நான் இருக்கிறேன் எனபது வெளிப்படையாகத் தெரிகின்றது.

உறக்கத்தில் நான் இருக்கி றேன் என்பது தெரியவில்லை யாயினும் நான் இருக்கிறேன் என்பது மாபெரும் உண்மை. அந்த இருப்பை உணர்வதற்கு உறக்கத்தில் உடல் மனம் புத்தி முதலியன இயங்குவதில்லை. இருக்கிறேன் என்று கூறுவதற்கு உடலும். மனமும் தேவையாகின்றன. இருப்பதற்கு உடலும் மனமும் தேவையில்லை என்பதனை நமக்குத் தெளிவாக உணர்த்துகின்றது.

நான் உடலன்று. மனமன்று. புத்தியன்று. நான் எப்பொழுதும் இருக்கின்றேன் உடலும். மனமும். புத்தியும் தோன்றி மறையக்கூடியவை. இத்தகைய வேறுபாடுகளை அறிகின்ற நான் வேற்றுமைகள்

அற்றவன்

நான் இருக்கிறேன் என்பதை உணர்கிறேன் இருப்பு வேறு உணர்வு வேறு அன்று. சொற்கள் இரண்டேயன்றி பொருள் ஒன்றுதான். இருப்பே உணர்வு. உணர்வே இருப்பு.

உணர்ச்சி வேறு; உணர்வு வேறு என்பதனை இங்கு அறிதல் வேண்டும். நன்கு ஆராய்ந்து பார்க்குமிடத்து நீ உணர்வு மயமாக இருக்கின்றாய் என்பதனை அறிவாய். இதனைத் தாயுமானவர்

"பாராதி பூதம் நீ அல்லை — உன்னிப்
பார் இந்திரியம் கரணம் நீ அல்லை
ஆராய் உணர்வு நீ என்றான் — ஐயன்
அன்பாய் உரைத்த சொல் ஆனந்தம் தோழி"

என்று தனது குருநாதர் கூறியதாகக் கூறுதலும் நினைக்கத்தகும்.

அடுத்து, நான் ஆனந்த வடிவினன் என்பதைக் காண்போம். நமக்குத் துன்பம் வரும்போது அதை வெறுக்கின்றோம். நம்மை தாழ்த்தியோ, இகழ்ந்தோ மற்றவர் பேசுமிடத்து வெறுப்பும், சினமும் தோன்றுகின்றன.

நம்மைத் தாக்கும் துன்பத்தை வெறுக்கிறோம். நம் பகைவர்களைத் தாக்கும் துன்பத்தை நாம் வெறுப்பதில்லை இதற்கு நம்மிடம் நமக்குள்ள பற்றும் அன்பும் காரணமாகின்றன.



எங்கெல்லாம் இன்பம் இருக்கின்றதோ அங்கு அன்பு உண்டாவது இயல்பு. நம் வீட்டுக் குழந்தை நமக்கு இன்பம் தருகின்றது அதனால் நாம்

அதனிடம் அன்பு செலுத்துகிறோம். எனவே. நமது அன்பு எங்கிருக்கிறது என்று சிந்தித்துப் பார்த்தால், எங்கு நமக்கு இன்பம் கிடைக்கிறதோ அங்குதான் அன்பிருக்கிறது என்பது தெரிகின்றது.

இன்பமில்லாத இடத்து அன்பு இருக்காது. நண்பர்களிடம் உரையாடுவதில் மகிழ்ச்சி அடைகின்றோம். அங்கு அன்பு நிலைபெறுகிறது. இன்பம் தருமிடத்தேதான் அன்பு இருக்குமாதலால், நம்மிடம் நமக்கு மிகுந்த அன்பிருப்பதால், நாம் ஆனந்தத்தின் இருப்பிடமே என்பது தெளிவாகின்றது.

ஆனந்தத்தை அனுபவிக்க உடலும் மனமும் தேவை. ஆனந்தமாக இருப்பதற்கு உடலும் மனமும் தேவையில்லை. எனவே வேதாந்தம் கூறும் ஆனந்தம் அநுபவிப்பது அன்று, ஆனந்தமாக இருக்கிறோம் என்று புரிந்து கொள்வதாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

நான் இருப்பாக, உணர்வாக, ஆனந்தமாக இருக்கிறேன், துன்பப்படும் போதும் என்னை எனக்குப்பிடிக்காமல் இருப்பதில்லை. நான் எப்போதும் ஆனந்த வடிவம். துன்ப துயரங்கள் யாவும் மனதுக்குத்தான்.

துன்பங்களையும், உலகியல் இன்பங்களையும் அறிகிறவன் சாட்சியான நித்யானந்த சொரூபம்.

வ்யாவஹாரிகப் பார்வையில் நாம் எல்லோரும் சிற்றறிவுடைய ஜீவர்களேயாம். பாரமார்த்திகப் பார்வையில் எல்லோரும் பூர்ணானந்தர்களேயாவோம்.



வ்யவஹாரம் பாரமார்த்திகத்தின் மீது வந்து தோன்றி மறைகிறது. சச்சிதானந்தத்தின் மீது மாயையால் தனக்கென்று இருப்பில்லாத "அந்ருத ஜட துக்கம்" வருகின்றது. அந்ருத ஜட துக்கத்திற்குப் பிறப்புண்டு, வாழ்வுண்டு, அழிவும் உண்டு.

"நான் இருக்கிறேன், நான் உணர்கிறேன், நான் ஆனந்தமாக இருக்கிறேன்" என்பவை அநுபவப் ப்ரமாணம். "நான் ப்ரஹ்ம்மமாக இருக்கிறேன்" என்பதை அனுபவிக்க முடியாது.

ப்ரஹ்ம்மமாக இருக்கிறேன் என்பதை அறிந்து கொள்ளத்தான் வேண்டும். எல்லோருக்கும் இருப்பு, உணர்வு, ஆனந்தம் ஒன்றேயாக உள்ளது. உடல், மனம், புத்தி முதலானவை வெவ்வேறாக உள்ளன.

எப்போதும் இருக்கும் அம்சமாகிய சச்சிதானந்தம் ஒன்றுதான். இவ்வாறு சச்சிதானந்த வடிவில் பரம்பொருளும் நானும் ஒன்றே என்பது விளக்கப்பட்டது. அடுத்து, நான் எப்படி ப்ரஹ்மமாக இருக்க முடியும் என்பது உத்தி வாயிலாக நிறுவப்படுகிறது.

மய்யாவோதேதி சித்வ்யோம்நி ஜகத்கந்தர்வபத்தநம் ।
அதோSஹம் ந கதம் ப்ரஹ்ம ஸர்வஜ்ஞம் ஸர்வகாரணம்॥

(ச்லோகம்-3)

சிதாகாச ஸ்வரூபமாகிய என்னிடத்தில்தான் உலகமாகிய கந்தர்வ பட்டணம் தோன்றுகிறது. எனவே, நான் எப்படி அனைத்துமறிகின்ற சர்வகாரணமான பரம்பொருளாக இல்லாமல் இருக்க

முடியும் என்றார்.

ப்ரஹ்மம் என்பது நிர்குணம் எனப்படும் உருவமுள்ள நிலையைக் குறிப்பதாகும். ப்ரஹ்மம் மாயாரஹிதம் எனப்படுகிறது அதாவது மாயை அற்ற பெருநிலையைக் குறிப்பதாகிறது.

மாயையோடு இணையுமிடத்து இறைவன் என்ற குறியீடு வழங்கப்படுகிறது. ப்ரஹ்மம் விவர்த்தஉபாதான காரணமென்றும், இறைவன் அபின்ன நிமித்த உபாதான காரணமென்றும், மாயை பரிணாம உபாதான காரணம் என்றும் கூறப்படுகின்றன.

விவர்த்த உபாதான காரணமாகிய ப்ரஹ்மம் பரிணாம உபாதான காரணமாகிய மாயையில் ப்ரதிபிம்பிக்கும் போது அவன் அபின்ன நிமித்த உபாதான காரணமாகிய ஈஸ்வரனாகின்றான். ப்ரஹ்மம் மாயையின் சத்வ அம்சத்தில் ப்ரதிபிம்பிக்கும்போது இறைவன் என்று அழைக்கப்படுகிறது.

மாயையின் தமோகுண அம்சத்தில் ப்ரதிபிம்பிக்கும்போது ஜீவன் என்ற பெயர் பெறுகிறது. ப்ரஹ்மம் மாயையோடு இணையுமிடத்து அனைத்து குணங்களும், ஆற்றல்களும் மாயையிலிருந்து வெளிப்படுகின்றன. பேரறிவாகிய ப்ரஹ்மத்தின் மீதுதான் வாலறிவனாகிய இறைவனும் சிற்றறிவுடையோனாகிய ஜீவனும் மாயையால் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

வாலறிவனுக்கும், சிற்றறிவுடைய மனிதனுக்கும் இருப்பு ப்ரஹ்மமேயாகும் வாலறிவை உணர்வதும்,

சிற்றறிவை உணர்வதும் பேரறிவேயாகும். ஆனவே வாலறிவையும், சிற்றறிவையும் எது அறிகிறதோ அது மஹா ஸர்வஞ்ஞன். எனக்கு இறைவனைப்போல் உலகம் முழுக்க எல்லாம் தெரியா விட்டாலும் எனது புத்தியின் தன்மைக்கு ஏற்ப சில செய்திகள் தெரிகின்றன.

கடவுளின் உபாதி பெரியது. என்னுடைய உபாதி சிறியது. ஆயினும் இருவருடைய அதிஷ்டானம் ஒன்றுதான். எனவே இறைவனது ஸர்வக்ஞத்வத்தை (வாலறிவை) ப்ரகாசம் பண்ணுகின்ற நான், அல்பக்ஞத்வத்தை (சிற்றறிவை) ப்ரகாசம் பண்ணுகின்ற நான், வாலறிவையும், சிற்றறிவையும் ப்ரகாசம் பண்ணுகின்ற நான் ஸர்வஞ்ஞன் என்று சொல்லியா தெரிந்து கொள்ள வேண்டும்? என்ற வினா. வாயிலாக நான் ஸர்வக்ஞன் அதாவது பேரறிவு ஸ்வரூபமாகிய பரம்பொருள் என்பது ஐயமற நிறுவப்படுகிறது.

**கடவுளுக்கு எல்லாம் தெரியும், எனக்குச் சிறிதளவு தெரியும் என்று நினைக்கிறோம். எல்லாம் தெரியும், சிறிதளவே தெரியும் என்று எதற்குத் தெரியுமோ அது ப்ரஹ்மம்.** ஆழ்ந்து நோக்கும்போது எல்லாவற்றிற்கும் இருப்பாக இருப்பது ப்ரஹ்மமே என்பது தெளிவாகும்.

ஆகாயத்தில் அழகிய மேகக்கூட்டங்களின் தோற்றம் கந்தர்வப் பட்டணம் போல் காணப்படுகிறது. இவ்வாறு ஆகாயத்தில் தோன்றும் கந்தர்வ பட்டணம் போல சிதாகாச ஸ்வரூபமாகிய என்னிடத்தில் இந்த உலகமாகிய கந்தர்வ பட்டணம் உண்டாகிறது.



நம்மிடத்தில் கனவுலகம் தோன்றி இருந்து, ஒடுங்குவதையும் அறிவோம். தகுதியான முறையில் ஆழ்ந்து ஆராயும் போது நம்மிடத்தில் தான் நனவுலகமும் தோன்றுவதை நாம் அறியலாம். எவனிடமிருந்து உலகம் வந்ததோ, இருக்கிறதோ, ஒடுங்குகிறதோ அவன் சர்வகாரணன்.

இவ்வாறு நான் அனைத்துமறிகின்ற ஸர்வகாரணமாகிய பரம்பொருளே என்பது நிறுவப்பட்டது.

சிற்றுயிர், பேருயிர், ஜீவன், கடவுள் என்ற பாகுபாடு வ்யவஹாரிக த்ருஷ்டியில் தேவையாகின்றது. இவற்றை பாரமார்த்திக த்ருஷ்டியில் விசாரம் செய்யும்போது கடவுள் அழியாதது ஜீவனும் அழியாதவன் என்பது அறியலாகிறது. எனவே அழியாத்தன்மையில் கடவுளும் ஜீவனும் ஒன்றே என்பது விளக்கப்படுகிறது.

ந ஸ்வத: ப்ரத்யபிஜ்ஞானாந்நிரம்சத்வாந்நசாந்யத: ।
ந சாச்ரயவிநாசாந்மே விநாச:ஸ்யாதநாச்ரயாத் ॥
(ச்லோகம்-4)

அனைத்து மாற்றங்களையும் இடைவிடாது உணர்ந்து கொண்டிருப்பதால் எனக்குத் தானாக அழிதல் இல்லை. உறுப்புக்கள் எதுவும் இல்லாததால் எனக்கு மற்ற மனிதர்களால் அழிதலானது இல்லை. எதையும் சார்ந்திராததால், சார்ந்திருக்கும் பொருள் அழிவதால் உண்டாகும் அழிதலானது இல்லை.

அழிவு மூன்று வகையில் ஏற்படலாம். தானாகவே காலப்போக்கில் உறுப்புக்கள் தேய்ந்து அழிதல். பிற பொருள்களால் அழிக்கப்படுதல்.



தனக்கு உறுதுணையாக இருந்த பொருள், அல்லது இருந்தவர் அழிந்தால் தானும் அழிந்தேன் என்று உணர்தல். இவை "ஸ்வயம் நாசம், அந்யேந நாசம், ஆச்ரய நாசம்" எனப்படுகின்றன.

இந்த மூன்று வகையான அழிவுகளும் எனக்கில்லை. குழந்தைப்பருவம், இளமை, முதுமை எனப்பருவங்கள் மாறலாம். உடல் மாற்றமடையலாம். ஆனால் நான் என்பது மாறாமல் இருக்கிறது என்பதை அறிகின்றோம்.

"இவ்வாத்மா ஒருபோதும் பிறப்பதுமில்லை, இறப்பதுமில்லை. இது இல்லாதிருந்து பிறகு பிறந்ததன்று. பிறந்து பிறகு இல்லாமல் போவதுமன்று. இது பிறவாதது, தேயாதது, வளராதது. காயம் கொல்லப்படுமிடத்தும், ஆத்மா கொல்லப்படுவதில்லை" என்று கண்ணன் கீதையில் கூறுவதும் இங்கு நினைக்கத்தகும்.

மேலும்,

**அவிநாசி து தத் வித்தி யேன ஸர்வமிதம் ததம் ।**
**விநாசமவ்யயஸ்யாஸ்ய ந கஸ்சித் கர்த்துமர்ஹதி ॥**

"உலகெலாம் பரவிய பொருள் அழிவற்றதென்று அறிக. அழியாப் பொருளை அழிக்க யாருக்கும் இயலாது" என்ற கூற்றும் குறிப்பிடத்தக்கது.

நிர்விகாரமாகிய மாற்றங்களற்ற ஆத்மாவுக்கு அழிவில்லை. ஸவிகாரமாகிய, மாற்றங்களை ஏற்கும் உடலுக்கு அழிவுண்டு. இளமை இறந்து முதுமை தோன்றுகிறது. இவை உடலில் ஏற்படும் மாற்றங்கள்.

ஆத்மாவுக்கு மாற்றமும் இல்லை. அழிவும் இல்லை. உடல் அழிந்த பின்னரும் நாம் இருப்போம்.

பேரரசன் அலெக்ஸாண்டர் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தபோது, "இந்தியாவில் சிறந்த தத்துவ ஞானிகள் பலர் இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து வருக" என்று அந்நாட்டு அறிஞர் ஒருவர் கூறி அனுப்பினார்.

அத்தகைய ஞானி ஒருவரைச் சந்தித்த அலெக்ஸாண்டர் அவரைத் தன் நாட்டுக்கு வருமாறு அழைத்தான். அந்த ஞானியோ தன் நாட்டைவிட்டுச் செல்ல மறுத்தார். அவருக்கு வேண்டிய வசதிகளைச் செய்துதர தன்னால் இயலுமென்று கூறினான் அரசன்.

தனது இருப்பிடத்திலேயே தான் ஆனந்தமாக இருப்தாகக் கூறி மேலும் மறுத்துவிட்டார் அந்த ஞானி. அரசனோ சினம் சீறி எழ ஞானியைப் பார்த்து "உன்னைக் கொன்று விடுவேன்" என்று தன் வாளை எடுத்தான்.

ஞானி சிரித்துக் கொண்டே, "இதைவிடப் பெரிய பொய்யை இதுவரை யாரும் கூறியதில்லை" என்றார். அரசன் திகைத்து நின்று எப்படி என்று கேட்டான். ஞானி "தனது உடலை அழிக்க முடியுமேயன்றித் தன்னை அழிக்க முடியாது என்ற தத்துவத்தை விளக்கிக் கூறினார்" மன்னன் உண்மையை அறிந்து வணங்கிச் சென்றான்.

ஞானிகள், செயல்களைச் செய்வதால் அதனின்று அவர்கள் பெறும் பயன் ஒன்றுமில்லை. செயல்களைச் செய்யாததால் இழப்பது



ஒன்றுமில்லை.

மற்றவர்கள் செயல்களைச் செய்வதால் பயன் பெறுகிறார்கள். பயனுக்காகவே செயல்களைச் செய்கிறார்கள். செயல்களைச் செய்யாவிடில் இழப்பை உணர்கிறார்கள். ''ஞானிக்கில்லை இன்பமும், துன்பமும்'' என்பது நினைக்கத்தக்கது.

'நான் உடல், மனம், புத்தி முதலானவற்றைச் சார்ந்து இல்லை. அவை யாவும் என்னைச் சார்ந்துள்ளன. அவை எனக்கு அணிகலன் போன்றவை. நான் முழுமையான, நித்தியமான ஆனந்த வடிவம், எனவே, எனக்கெப்போதும் அழிவில்லை.

நான் அழியாத ப்ரஹ்மம். இந்த உண்மையை அறிந்து, மரணம் வருகின்றதே என்ற கவலைக்கு இடந்தராதிருந்து பழக வேண்டும். மரணம் இன்றே வரலாம், அல்லது நெடுங்காலம் கழித்து வரலாம். எப்பொழுதாயினும் எனக்குத் துன்பமில்லை என்ற மன உறுதியை வளர்த்துக் கொள்ள வேண்டும். அடுத்து, எனக்கு உறுப்புக்கள் இல்லாததால், பிற பொருள்களாலும் அழிவில்லை என்பது விளக்கப்படுகிறது.

**ந சோஷப்லோஷவிக்லேதச்சேதாஸ்சிந்நபஸோ மம ।**
**ஸத்யைரப்யநிலாக்ந்யம்பசஸ்த்ரை: கிமுத கல்பிதை: ॥**

**(ச்லோகம்-5)**

நாம் அனுபவிக்கும் ஆகாயமானது, வ்யாவஹாரிக உண்மையாக நாம் பார்க்கும் நிலையில் இருப்பினும், அதற்கு நிகரான

இருப்புடைய காற்று, நீர், நெருப்பு, ஆயுதங்களால் முறையே உலர்த்துதல், மூழ்கடித்தல், எரித்தல், வெட்டுதல் ஆகியன ஆகாயத்தில் நிகழ்வதில்லை.

இவ்வாறிருக்க, சிதாகாசமாகிய என்னிடத்தில் கற்பிக்கப்பட்ட ஆகாயம், காற்று, நீர், நெருப்பு முதலான ஐந்து பூதங்களால் எனக்கு எவ்வாறு அழிவு உண்டாகும்?

ஆகாயத்திற்கே மேற்கூறி யவைகளால் அழிவில்லை என்றால், அந்த ஆகாயத்திற்கே ஆதாரமாம் சிதாகாசமாகிய என்னை என்ன செய்ய இயலும்? இதனை "கிமுத ந்யாயம்" என்று பகர்வர்.

மேற்கூறிய செய்திகளால் யான் அழிவற்றவன். எங்கும் நிறைந்தவன் என்பது தெளிவாகிறது. அழிவில்லாததும், எங்கும் நிறைந்ததுமான இரண்டு பொருள்கள் இருக்க இயலாததால், நான் அழியாத எங்கும் நிறைந்த ப்ரஹ்மமே என்பது அறியலாகிறது.

அழியாப் பொருளை அழிக்க யாருக்கும் இயலாது. அடுத்து, நான் எங்கும் நீக்கமற நிறைந்தவன் என்பது விளக்கப்படுகிறது.

**அபாரூபஸ்ய விச்வஸ்ய பாநம் பா ஸந்நிதேர்விநா |**
**கதாசிந்நாவகல்பேத பா சாSஹம் தேந ஸர்வக: ||**

(ச்லோகம்-6)

ஒளி இல்லாமல் ஒளியற்ற உலகத்தினுடைய ஒளிர்வு ஒரு பொழுதும் உண்டாகாது. நான் ஒளியாக (உணர்வாக) இருக்கிறேன். எனவே நான்



எங்கும் நீக்கமற நிறைந்தவன்.

உணர்வே ஒளிவடிமானது என்று கூறுவது மரபு. ஒளியின் துணை கொண்டு பொருள்களை அறிவதுபோல உணர்வினாலும் பொருள்களை அறிவதால் ஒளிக்கு ஒளியாக உணர்வு பகரப்படுகிறது.

உணர்வு இல்லையென்றால் உணரப்படும் பொருள்களை உணர முடியாது. அனைத்தையும் நான் உணர்வதால் அனைத்திலும் நான் இருக்கிறேன். உணர்வு எல்லாத் திசைகளிலும் செல்கிறது.

பல துவாரங்களை உடைய ஒரு குடம், அதனுள் விளக்கு ஒன்று வைக்கப்பட்டுள்ளது. துவாரங்களின் வழியாக ஒளி வெளியே வருவதுபோல, அந்தக்கரணத்தில் உள்ள சைதன்யம் இந்திரியங்களின் வழிவந்து, புறத்தே இருக்கின்ற பொருள்களை விளங்க வைக்கின்றது. ஒளியாகிய உணர்வு இல்லையானால் எதுவும் விளங்காது.

ஒவ்வொரு பொருளிலும் உணர்வுதான் ஒளிர்கிறது. அதன் இருப்பு இல்லையேல் எப்பொருளும் தெரியாது. அது எல்லாப் பொருள்களிலும் ப்ரகாசிக்கின்றது. நான்தான் அந்த உணர்வு. எனவே நான் எங்கும் நீக்கமற நிறைந்த ப்ரஹ்மம்.

அனைத்தையும் நான் உணர்வதால் அனைத்திலும் நான் இருக்கிறேன். எனவே எங்கும் நிறைந்த பரம்பொருளாகவே இருக்கின்றேன். "ஒரே



சூரியன் எவ்வாறு உலகனைத்தையும் ஒளியுறச் செய்கிறதோ, அவ்வாறே உலகனைத்தையும் பரமாத்மா ப்ரகாசிக்கச் செய்கிறான்" என்ற கண்ணன் கூற்றும் இங்கு நினைக்கத்தக்கது. அடுத்த ச்லோகம் நான் அத்வைத ஸ்வரூபம் என்பதனை நிறுவுகின்றது.

**நஹி பாநாத்ருதே ஸத்வம் நர்த்தே பாநம் சிதோ஽சித: |**
**சித்ஸம்பந்தோ஽பி நாத்யாஸாத்ருதே தேநாஹமத்வய: ||**

(ச்லோகம்-7)

உணர்வில்லாமல் பொருள்களின் இருப்புத்தன்மை விளங்காது. உணர்வில்லாமல் பொருள்களின் உணர்த்தும் தன்மையும் நிகழாது. ஜடப்பொருள்களுக்கு உணர்வோடு இருக்கும் தொடர்புகூட, அறியாமையினால் கற்பிக்கப்படாமல் உண்டாக முடியாது. உணர்வுக்கு வேறாக எப்பொருளும் இல்லாத காரணத்தால் நான் இரண்டற்றவனாக இருக்கின்றேன்.

ஒரு கயிற்றைப் பார்த்தோம். பாம்புபோல் காணப்பட்டதால், பாம்பு என்று நினைத்தோம். பாம்பு என்று நினைத்தபோதும் கயிறு என்பதுதான் உண்மை. பாம்பு என்ற எண்ணத்தைத் தோற்றுவித்தது மாயத்தோற்றமே. ப்ரஹ்மம் ஒன்றே யாண்டும் இருப்பது. உலகமும், உடலும் இருப்பவைபோல் தோன்றுவது. இது ஒரு மாயத்தோற்றம்.

உணர்வு இல்லை என்றால் பொருளே இல்லை. உணர்வு இருப்பதால்தான் பொருள்களின் இருப்பு விளங்குகின்றது. சூரியன், சந்திரன்,



விண்மீன்கள், இந்த்ரியங்கள் முதலான யாவும் ஜடப்பொருள்கள். மூலப்பொருளாகிய சைதன்யத்திடத்திருந்து (உணர்வை) ஒளியைப் பெற்றுத்தான் இவை ஒளிர்கின்றன.

ஆயினும் இவைகளுக்கு உணர்வு இருப்பதாக ஒரு தோற்றம் உண்டாகிறது. இக்கருத்தை கேனோபநிஷதம் ஒரு நிகழ்ச்சியின் வாயிலாக விளக்குகின்றது.

தேவர்களுக்கு வெற்றி கிடைத்தபோது செருக்குற்றனர். பரம்பொருள் அவர்களது செருக்கை அடக்க ஒரு யக்ஷன் வடிவத்தில் தோன்றியது. அங்கு சென்ற அக்கினிதேவனை நோக்கி, “நீ யார்” என்று வினவ “நான் எல்லாம் தெரிந்த அக்னிதேவன்” என்று செருக்கோடு விடைபகர்ந்தான்.

அப்படியானால், “இப்புல்லை எரிக்கவும்” என்று யக்ஷன் கூற, அக்னிதேவன் முயன்றும் அப்புல்லை எரிக்க முடியாது நின்றான். பின்னர் அங்கு சென்ற வாயு தேவனால் சிறு புல்லை நகர்த்தவும் இயலவில்லை.

இந்திரன் சென்றபோது அங்கு யக்ஷன் மறைய, அங்கு அம்பிகை தோன்றினாள். இந்திரன் அம்பிகையை வணங்கி நின்று, அங்கு தோன்றி மறைந்த யக்ஷனைப்பற்றி வினவியபோது, அதுதான் ப்ரஹ்மம், பரம்பொருள் என்று கூறினாள் அம்பிகை.

இந்திரனுக்கும் ஞானம் வந்தது. உண்மையை உணர்ந்தான். இந்திரனை மனமாகவும், மற்ற

தேவர்களைப் புலன்களாகவும் கொள்ளலாம். மனதும் புலன்களும் தாமே செயல்படும் ஆற்றலற்றவை இவை செயல்படுவதற்கு சைதன்யத்தின் துணை வேண்டும் என்பதனை இக்கதைப்பகுதி விளக்குகின்றது.

சித் இல்லாமல் ஜடத்திற்கு உணர்விக்கக்கூடிய, ப்ரகாசிக்கக்கூடிய ஆற்றல் இல்லை. பிம்பம் இல்லாமல் ப்ரதிபிம்பத்திற்கு எப்படி ப்ரகாசிக்கும் ஆற்றல் வரும்? என்னை நானே உணர்கிறேன். மற்றவை என்னிடமிருந்து ஒளிரும் தன்மையைப் பெறுகின்றன.

ஒரு இருட்டறையின் புறத்தே சூரிய ஒளியில் உள்ள ஒரு கண்ணாடியின் மீது சூரியன் ஒளிக்கதிர்கள் படிந்தன. அக்கண்ணாடியை அந்த அறைக்குள் காட்டும்போது அவ்வறை ஒளியைப் பெறுகிறது

உலகம் இந்த அறையைப் போன்றது. கண்ணாடிக்கு ஸ்வயம் ப்ரகாசம் இல்லையாயினும், சூரியவொளியின் ப்ரதிபலிப்பினால் ஒளியைப் பெறுகிறது.

அதுபோல மனதிற்கும், இந்திரியங்களுக்கும் ஸ்வயமாக ஒளிர்விக்கும் ஆற்றல் இல்லையாயினும் சைதன்யத்திடமிருந்து பேருணர்வை, பேரொளியைப் பெறுகின்றது. ஜடப்பொருள் சித்தோடு சேர்ந்திருப்பதால் ஒரு தொடர்பு இருக்கின்றது. ஆயினும் அத்தொடர்பும் கற்பனையே. ஜடப்பொருள்களும் மாயத்தோற்றமே.

சித்தாகிய நான் அத்வைத ஸ்வரூபமாக



இருக்கின்றேன். இந்த உலகை நாம் அனுபவிக்கின்றோம். பரிபூரண த்வைதத்தில் இருக்கின்றோம். "ஓதரிய துவிதமே அத்துவித ஞானத்தை உண்டுபண்ணும் ஞானமாகும் ஊகம் அனுபவம் வசனம் மூன்றுக்கும் ஒவ்வும் இது" என்றார் தாயுமானவர். த்வைதத்தில்தான் அத்வைதத்தைப்பற்றிப் பேச இயலும். அத்வைதத்தில் அத்வைதத்தைப் பற்றிப் பேச இயலாது.

"நான் அத்வைத ஸ்வரூபம்" என்ற கருத்தே எட்டு முதல் பன்னிரெண்டாம் ஸ்லோகம் வரை கூறப்படுகிறது.

**ந தேஹோ நேந்த்ரியம் சாஹம் நப்ராணோந மநோ ந தீ: |**
**மமதாபரிரப்தத்வாதாக்ரீடத்வாதிதம் திய: ||**

(ச்லோகம்-8)

எனது என்னும் எண்ணத்தால் தழுவப்படுவதாலும், இது என்று அறிவுக்கு விஷயமாக இருப்பதாலும், நான் உடலல்ல, இந்திரியங்களும் அல்ல, மனமும் அல்ல, புத்தியும் அல்ல, என்னுடையது என்று கூறும்போது அப்பொருள் நான் அன்று என்பது தெளிவாகின்றது.

என்னுடைய உடல்நலம் சரியில்லை என்று கூறுகின்றோம். நான் சரியாயில்லை என்பது பொருந்தாது. எனவே நான் வேறு, உடல்வேறு என்பது தெளிவாகின்றது. உடலை நான் என்று நினைத்து, அதனிடத்துக் கொண்டுள்ள பற்றை நீக்க வேண்டும்.



நான் குருடன், நான் செவிடன் என்ற பற்று வேண்டாம். இவையாவும், கண், செவி முதலிய இந்திரியங்களின் தர்மம். பசிக்கின்றது அது பிராணனின் தர்மம். ஆத்மாவுக்குப் பசியும் தாகமும் இல்லை. நான் மனம் அல்ல, புத்தியும் அல்ல. மனம் பொய் என்று நிச்சயிப்பதே மனத்தை ஒழிப்பதற்கு நிகர் என்பது வேதாந்தத்தின் கோட்பாடாகும்.

மனம் இறந்து போகுமிடத்து ஞான பரம்பரையே இருக்க இயலாது. ஜீவன் முக்தி என்ற நிலையும் இருக்க இயலாது. ஊழ்வினை ஞானிக்கு இருக்கிறது என்ற கருத்தும் பொய்யாகும். எனவே அறியாமையை அழிப்பதே மனதை அழிப்பதற்கு நிகராகும். தீய எண்ணங்களைக் குறைப்பதும், தீய எண்ணங்களைப் பொருட்படுத்தாதிருப்பதுமே மனத்தை அழிப்பதற்கு நிகராகும்.

உலகில் உள்ள எல்லாத்துறை அறிவு நிலைகளையும் பெற முடியவில்லையே என்ற கவலை வேண்டாம். புத்தியில் பற்று இருக்கலாகாது. புத்தி பல்வேறு துன்பங்களுக்கும் காரணமாக இருக்கின்றது. நான் எல்லாம் தெரிந்தவன் என்ற எண்ணமும் வேண்டாம்.

நான் உடலன்று, மனமன்று, ப்ராணன் அன்று, இந்திரியங்களும் அன்று, புத்தியும் அன்று. ஆயினும் நாம் மனதோடு நம்மை இணைத்துக் கொண்டு மகிழ்கின்றோம். அல்லது வருந்துகின்றோம். நான் அழகாக இருக்கின்றேன் என்று உடலோடும், எனக்குக் கண் சரியாகத் தெரியவில்லை என்று பொறியுடனும், பசியுடனும்

இருக்கின்றேன் என்று ப்ராணனுடனும் நான் அறிவாளி என்று புத்தியுடனும் இணைத்துக் கொண்டு இன்பத்தையும், துன்பத்தையும் அனுபவிக்கிறோம்.

உடல், மனது, புத்தி, இந்திரியங்கள் ஆகியவற்றின் தர்மங்களை, தன்மைகளை நம்மீது ஏற்றிக் கொண்டு ஸம்ஸாரத்தில் உழன்று கொண்டிருக்கிறோம். அவை ஆத்மா அல்ல, உண்மையில் அவைகள் நீ அல்ல.

"அவைகளோடு உன்னை இணைத்துக் கொண்டு இன்ப, துன்பங்களை அநுபவிப்பதாக எண்ணாதே" என்று வேதாந்தம் கூறுகிறது. உடல், மனம் முதலியன இல்லாத காலத்தும் நீ இருக்கிறாய். உனக்குப் பிறப்பும், இறப்பும் இல்லை. அவைகளுக்குத்தான் தேய்வும், வளர்ச்சியும் இருக்கின்றன.

இவ்வாறு வேதாந்தம் நாம் யார் என்பதைத் தெளிவாகக் கூறுகின்றது. எது வாக்கினால், மனதால் அறிந்து கொள்ள முடியாதோ, எது வாக்கையும் மனதையும் ஒளிர்விக்கின்றதோ அதுவே ப்ரஹ்மம். அதுவே நீ என்று புரிந்து கொள்.

உடல், மனம், புத்தி, இந்திரியங்கள் நான் அல்ல என்று கூறிய ஆசிரியர் அடுத்து அஹங்காரமும் நான் அல்ல என்று கூறுகிறார்.

ஸாக்ஷீ ஸர்வாந்வித: ப்ரேயாநஹம் நாSஹம் கதாசன ।
பரிணாமபரிச்சேதபரிதாபைருபப்லவாத் ||

(ச்லோகம்-9)

விருப்பு, வெறுப்பு முதலான மாற்றங்களுடனும், இடம், காலம், பொருள் ஆகியவற்றால் வரையறுக்கப்பட்ட தன்மையுடனும், துன்பங்களுடனும் தொடர்புடையதாக அஹங்காரம் இருப்பதால் அனைத்திலும் நிறைந்திருக்கின்ற சாக்ஷியாகவும் அனைத்தையும் காண்கின்ற பேரின்ப வடிவமாகவும் இருக்கும் நான் முக்காலத்திலும் அஹங்காரம் அல்ல.

மனம் சிந்திக்க, புத்தி உறுதி செய்கின்றது. உறுதியான எண்ணம் புத்தி என்று அழைக்கப்படுகிறது இச்சா சக்தியாகிய ஆசைப்படும் ஆற்றல் மனதைச் சார்ந்தது. ஞான சக்தியாகிய அறிந்து கொள்ளும் ஆற்றல் புத்தியைச் சேர்ந்தது.

நான் நினைக்கின்றேன், நான் அறிந்து கொண்டேன் என்று கூறும்போது, அஹங்காரத்தை நான் என்று கூறலாமா என்ற வினா எழுகின்றது. தமிழ் மொழியில் அஹங்காரம் என்பது ஆணவம், தன்முனைப்பு என்று பொருள்படுகின்றது. இங்கு அஹங்காரம் என்பது "அகம் கரோமி" நான் செய்கிறேன் என்ற எண்ணத்தைக் குறிக்கின்றது.

நான் நல்லது செய்ய வேண்டும் என்று நினைப்பதும் அஹங்காரம், அஹங்காரம் இல்லாமல் சிந்திக்க, பேச, இயலாது. அஹங்காரம் இல்லாமல் வ்யவகாரம், செயல்கள் செய்ய இயலாது. ஜீவன் முக்தனுக்கும் அஹங்காரம் ஒரு கருவியாக இருக்கின்றது. பேருணர்வு என்று சொல்லப்படுகின்ற சுத்த சைதன்யம் ஜடமாக இருக்கும் அந்தக்கரணத்தில் ப்ரதிபலிக் கின்றது.

இந்தப் பேருணர்வும், ப்ரதி பிம்பமும், அந்தக்கரணமும் சேர்ந்துதான் அஹங்காரம். இவை மூன்றும் அல்லாமல் செயல்கள் இல்லை.

அஹங்காரம் இருக்கும்போதுதான் துன்பம். தூக்கத்தில் அஹங்காரம் இல்லை. ஆயினும் நான் இருக்கிறேன். எனவே அஹங்காரம் நான் அன்று என்பது தெளிவாகிறது. நான் எல்லாவற்றிலும் இருப்பு வடிவமாக ஊடுருவி இருக்கின்றேன். அணுவுக்குள் அணுவாக பெரியவற்றிலெல்லாம் மிகப் பெரியதாகப் பரம்பொருள் இருக்கிறது என்று கூறுவதும் அப்பரம்பொருளிடத்துக் கற்பிக்கப்பட்டவையே. இவை உருவங்கடந்த பெருநிலையின் தன்மைகளை விளக்கும் முயற்சிகளேயாம்.

கேநோபநிஷத்தில் குரு சீடனிடம், "தெரிந்ததைக் காட்டிலும் வேறானது, தெரியாததைக் காட்டிலும் வேறானது என்று எங்கள் முன்னோர்கள் கூறினார்கள். நாங்கள் அதை அறிந்தோம்" என்றார். இதைக் கேட்ட சீடன் "நான் தெரிந்து கொள்ளவில்லை, தெரிந்து கொள்ள விரும்பவும் இல்லை" என்றான். மகிழ்ச்சியடைந்த குரு, "தெரிந்து கொண்டாய்" என்றார். ப்ரஹ்மம் அறியப்படுபொருள் அன்று, எனவே அறிய விரும்பவில்லை என்பது கருத்து. நானே அதுவாக இருப்பதால் என்னை நான் அறிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. என்னை நானே அறிந்து கொள்ள முடியாது.

"அறிபடுபோருள் நீ அல்லை அறிபடாப்பொருள் நீ அல்லை
அறிபொருள் ஆகும் நின்னை அனுபவத்தறிவாய் நீயே"

என்று கைவல்ய நவநீதம் கருத்தும் இங்கு நினைக்கத்தகும். அறியாமையையும், அறிவையும் அறிவது எதுவோ அது யாண்டும் அறிவாகவே உள்ளது. அனைத்திலும் நான் இருக்கின்றேன்.

நான் ஆனந்த ஸ்வரூபமாக இருக்கிறேன். எனக்கு இன்பம் தருபவரிடத்து நான் அன்பு செலுத்துகிறேன். எனக்கு என்னிடத்துள்ள அன்பே, நான் ஆனந்த ஸ்வரூபம் என்பதனைக் தெளிவாக்குகின்றது.

யாஜ்ஞுவல்க்யர் துறவு மேற்கொள்ளும்போது, தன் மனைவி மைத்ரேயியை நோக்கி, "நமக்காகத்தான் நாம் பிறரை நேசிக்கிறோம் என்ற உண்மையை விளக்கிக் கூறுகிறார். தன் பொருட்டே மனிதன் அனைத்திடத்தும் அன்பு செலுத்துகின்றான். மற்ற பொருள்களுக்காகவோ, மற்ற மக்களுக்காகவோ யாரும் அன்பு செலுத்துவதில்லை" மேலும் "உனக்காக நான் உயிர்வாழ்கின்றேன் என்பது உண்மையன்று. எனக்காக நான் உயிர் வாழ்கின்றேன்" என்பதுதான் உண்மை. கணவனை நேசிப்பது கணவனுக்காக அல்ல, தனக்காக என்றும் மகனை நேசிப்பது மகனுக்காக அன்று, தனக்காகவே என்று கூறிச் செல்கிறார்.

ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீரங்களைக் கடந்த பஞ்ச கோசங்களுக்கு வேறான, மூன்று அவஸ்தைகளுக்குச் சாட்சியான சச்சிதானந்த சொரூபமே நான். வ்யாவகாரிக நிலையில் கூறப்படும் நான், உடல், மனம், அஹங்காரம் முதலியவற்றுடன் கூடியதாகும்.

இந்த நான் வந்து போவதை கவனிப்பது



சச்சிதானந்த ஸ்வரூபமாகிய பெரிய நான் அஹங்காரத்திற்கு விருப்பு வெறுப்பு போன்ற பரிச்சேதம் அதாவது வேறுபாடுகள் உண்டு பரிதாபம் எனப்படும் துக்கமும் அஹங்காரத்திற் குரியதாகும்

இவ்வாறு செய்திருக்கலமோ அல்லது அவ்வாறு செய்திருக்கலாமோ என்று எண்ணி எண்ணி நினைந்து நினைந்து கவலைப்படுதல் மக்கள் இயல்பு. பரிணாமம் எனப்படும் தேய்வும் வளர்ச்சியும் அஹங்காரத்திற்குரியதாகும் (பரிச்சேதம் பரிதாபம், பரிணாமம்) வேறுபாடுகளும் துக்கமும், மாறுதல்களும் எனக்கில்லை

இவை மூன்றும் அஹங்காரத்திற்குரியவாம் பொதுவாக இவையாவும் நமக்குரியனவாக எண்ணுகின்றோம் அஹங்கார மாகிய ப்ரதிபலிப்பை உண்மை என்று நினைக்கிறோம் உண்மையான போலியான அஹங்காரத்தின் பொருட்டு வருந்தலாகாது

போலிப் பொருள் உண்மைப்பொருளாகக் காணப்படுவது போல் அஹங்காரத்தை உண்மை எனக்கொண்டு வருந்துகின்றோம் அஹங்காரம், விருப்பு. வெறுப்பு முதலான பரிச்சேதங்களுடனும். காலம். இடம் பொருட்களாகிய பரிணாமங்களுடனும். துக்கமாகிய பரிதாபத்துடனும் தொடர்புடையது. நான் எங்கும் பரந்து, நிறைந்து. ஊடுருவியிருக்கும் சச்சிதானந்த ஸ்வரூபம். எனவே அஹங்காரம் நான் அல்ல என்பது தெளிவாகின்றது. அஹங்காரத்தின் தன்மை மேலும் விளக்கப்படுகிறது.



**ஸுப்தேऽஹமி ந த்ருச்யந்தே து:கதோஷப்ரவ்ருத்தய:।**
**அதஸ்தஸ்யைவ ஸம்ஸாரோ ந மே ஸம்ஸர்த்ரு ஸாக்ஷிண:॥**

(ச்லோகம்-10)

அஹங்காரம் உறங்கும்போது துன்பம், பற்றாகிய குற்றம் ஆகிய செயல்கள் காணப்படுவதில்லை. ஆகையால் அஹங்காரத்திற்குத்தான் பிறவிச் சுழல் ஏற்படுகிறது. அஹங்காரத்திற்குச் சாட்சியான என்னிடத்தில் பிறவிச் சுழல் நிகழ்வதில்லை.

அஹங்காரம் என்பது செயல்படுந்தன்மை, அநுபவித்தல் ஆகியவற்றைக் குறிக்கிறது. ஸம்ஸாரம் என்பது பிறந்து, வாழ்ந்து, இறந்து மறுபடியும் பிறந்து வாழ்ந்து இறக்கும் பிறவிச்சுழலைக் குறிக்கின்றது. உடல் இன்ப துன்பங்களை அனுபவிப்பதற்குரிய இருப்பிடம். அஹங்காரம் விழிப்பிலும் செயல்படுகின்றது. உறக்கத்தில் ஒடுங்கியிருக்கின்றது. உறக்கத்திலும் ஆத்மா ஆநந்த ஸ்வரூபமாகயிருக்கிறது.

எது மூன்று நிலைகளிலும் இருக்கின்றதோ அது ஆத்மா. உலக வாழ்வின் இன்ப துன்பங்களுக்குட்பட்ட அஹங்காரம் இரண்டு நிலைகளில்தான் செயல்படுகின்றது. அஹங்காரம் இருக்கும் வரையில் துன்பம் உண்டு.

இன்பத்தையும் துன்பத்தையும் அநுபவிக்கும் இடம் உடல். இறைவனே அவதாரமெடுத்துவரினும், துன்பத்தை அனுபவிக்க வேண்டியிருந்தது. இராமன் சீதையைப் பிரிந்து, வருந்திய நிலையைக் காண்கின்றோம். எனவே வந்து வந்து போகும்

பிறவிச்சுழலை அறிகின்ற நான் அஹங்காரமல்ல. உறங்குவது போலும் சாக்காடு என்றார் வள்ளுவப் பெருந்தகை.

இந்த உடலில் தூங்கி, இதே உடலில் எழுவதை உறக்கம், விழிப்பு எனப்படுகிறது. இந்த உடம்பில் தூங்கி (மரணமடைந்து) வேறு உடலில் எழுவது இறப்பு, பிறப்பு எனப்படுகிறது. "சிறிய மரணமே தூக்கம், பெரிய தூக்கமே மரணம்" என்பது ரமண மகரிஷியின் கூற்றாகும்.

அஹங்காரத்திற்குத்தான் விழிப்பும், கனவும், உறக்கமும் உள்ளன. ஆனால் அஹங்காரம் உறக்கத்தை அறிவதில்லை. ஆத்மா மூன்று நிலைகளையும் அறிகின்றது.

ஆத்மா தூங்குவதில்லை, விழிப்பதில்லை, கனவு காண்பதில்லை. இம்மூன்று நிலைகளையும் அறிந்து கொள்வது, மூன்றையும் ப்ரகாசப்படுத்துவது ஆத்மா. எனவே அஹங்காரத்திற்குச் சாட்சியான ஆத்மாவுக்கு ஸம்ஸாரம் இல்லை என்பது தெளிவாகின்றது. இது அநுபவப்பிரமாண நிருபணம்.

**ஸுப்த: ஸுப்திம் ந ஜாநாதி நாऽஸுப்தே ஸ்வப்ந ஜாகரே|**
**ஜாக்ரத்ஸ்வப்நஸுஷுப்தீநாம் ஸாக்ஷ்யதோऽஹமதத்ருச:||**

(ச்லோகம்-11)

உறங்குபவனாகிய அஹங்காரம் உறக்கத்தை அறிவதில்லை. உறக்கம் அற்ற ஆத்மாவினிடத்தில் கனவும், விழிப்பும் இல்லை. ஆத்மாவாகிய நான் விழிப்பு, கனவு, உறக்கத்திற்குச் சாட்சியாக



இருக்கிறேன். எனவே நான் அம்மூன்று நிலைகளும் அற்றவன்.

மேலும் அஹங்காரத்தின் இயல்பே இயம்பப்படுகிறது. அஹங்காரம் உறக்கத்தை அறிவதில்லை. உறங்காத ஆத்மாவிடத்தில் விழிப்பும் கனவும் இல்லை. கனவிலும், விழிப்பிலும் ஆத்மா அஹங்காரத்தின் வாயிலாக உறக்கத்தையும் நிகழ்ச்சிகளையும் அறிகிறது.

உறக்கத்தில் அஹங்காரம் இல்லாததால் ஆத்மா நேரடியாக உறக்கத்தை அறிகிறது. இம்மூன்று நிலைகளையும் அறிவதும், அவைகளுக்கு சாட்சியாக இருப்பதும் ஆத்மா. எனவே அந்த மூன்று நிலைகளும் எனக்கில்லை, அவை மூன்றும் அஹங்காரத்தைச் சார்ந்தவை.

லலிதா ஸஹஸ்ரநாமத்தில், "ஸர்வ அவஸ்தா விவர்ஜிதாயை" என்று அம்பிகை போற்றப்படுகிறாள். அதாவது நனவு, கனவு, உறக்கம் ஆகிய நிலைகளைக் கடந்தவள் என்பது கூறப்பட்டது.

நித்யஜ்ஞான ஸ்வரூபமாகிய அதாவது யாண்டும் அறிவு வடிவாக இருக்கும் எனக்கு உறக்கம், கனவு, நனவு ஆகிய மூன்று நிலைகளும் இல்லையாதலால் நான் அத்வைத ஸ்வரூபம் என்பது கூறப்படுகிறது

**விஜ்ஞாநவிரதி: ஸுஷுப்திஸ்தஜ்ஜந்ம ஸ்வப்நஜாகரௌ ।**
**தத்ஸாக்ஷிண: கதம் மேஸ்யுர்நித்யஜ்ஞாநஸ்ய தே த்ரய: ॥**

(ச்லோகம்-12)

விசேஷ அறிவின் ஒடுக்கம் உறக்கம். அதன் தோற்றமே கனவும், விழிப்பும். முக்காலத்தும் உணர்வாய் விளங்குகின்றவனும், அவைகளுக்குச் சாட்சியாகவும் விளங்குகின்ற என்னிடத்தில் அம்மூன்று நிலைகளும் எவ்வாறு இருக்க முடியும்?

விசேஷ ஞானம் இல்லாத நிலையே உறக்கம். இந்த ஞானம் வாஸனா ப்ரபஞ்ச விசேஷ ஞானம், ஜாக்ர ப்ரபஞ்ச விசேஷ ஞானம் என இருவகைப்படும். இவை முறையே கனவில் நிகழும் பதிவுகளையும், நனவில் இது நாற்காலி, இவன் இராமன் என்று அறிதலையும் குறிக்கும். உறக்கத்தில் விசேஷ ஞானம் இல்லை. அது நிர்விகல்ப ரூபம் எனப்படுகிறது.

எங்கே விகல்பம் இருக்கிறதோ அங்கேதான் விசேஷ ஞானம் இருக்கும். விசேஷ ஞானம் ஒடுங்குவதுதான் உறக்கம். விசேஷ ஞானத்தின் தோற்றம்தான் கனவும், நனவும். எங்கே ஸவிகல்பம் இருக்கிறதோ அங்கு கனவும், நனவும் இருக்கும்.

நான் என்பது ஸாமான்ய ஞானம். அதாவது ஸமமாக இருக்கின்ற ஞானம். நான் ஆத்ம ஸ்வரூபம் என்பது ஸாமான்ய ஞானம். நான் படித்தவன், நான் டாக்டர் என்று கூறுவது விசேஷ ஞானம். ஸமான்ய ஞானம் எப்போதும் இருக்கிறது. விசேஷ ஞானம் வந்து போகக்கூடியது. ஆத்மா நித்ய ஞான ஸ்வரூபம்.



அடுத்து ஆத்மா நிர்விகாரம் என்பது நிறுவப்படுகிறது.

ஷட்விகாரவதாம் வேத்தா நிர்விகாரோऽஹமந்யதா
தத்விகாராநுஸந்தாநம் ஸர்வதா நாऽவகல்பதே

(ச்லோகம்-13)

ஆறுவித மாற்றங்களை அறிபவனாகிய நான் முக்காலத்தும் மாற்றமற்றவன். இல்லையெனின் அந்த மாற்றங்களை இடைவிடாது உணர இயலாது.

தாயின் வயிற்றில் இருத்தல், பிறத்தல், வளர்தல், உடலில் ஏற்படும் மாறுதல்கள், தேய்தல், மாய்தல் என்பன ஆறுவகை மாற்றங்களாகும். இந்த மாற்றங்களெல்லாம் அநாத்மாவுக்குத்தான் ஆத்மாவுக்கு அல்ல.

மாற்றங்களை அறிகின்ற ஆத்மா மாற்றங்கள் அற்றது. இங்கு க்ஷணிக விக்ஞான வாதம் எனப்படும் பௌத்தர்களின் கொள்கை மறுக்கப்படுகிறது. மாற்றங்களை அறிபவனும் மாறிக் கொண்டேயிருக்கின்றான் என்பது பௌத்தசமயக் கொள்கை.

ஆத்மா மாறாமல் இருப்பதால்தான் உடலில் மாற்றங்கள் நிகழ்கின்றன என்பதைத் தொடர்ந்து அறிய முடிகிறது. நான் ஸவிகாரத்திற்குச் ஸாக்ஷி. அதாவது மாற்றங்களுக்குச் ஸாக்ஷியாக இருக்கிறேன். நிர்விகாரம் இல்லையானால் ஸவிகாரத்தை எப்படி, யார் அறிவது? மாற்றங்களை அறிபவன் மாறாதவனாகத்தான் இருக்க வேண்டும். எனவே நான் நிர்விகாரம் என்பது அறியலாகிறது.

விகாரிக்கும், விகாரத்திற்கும் உள்ள தொடர்பு அதாவது மாற்றங்களை உடையவனுக்கும்,

மாற்றங்களுக்கும் உள்ள தொடர்பு யாது என்பது கூறப்படுகின்றது.

**தேந தேந ஹி ரூபேண ஜாயதே லீயதே முஹு: ।**
**விகாரிவஸ்துநஸ்தேஷாமநுஸந்தாத்ருதா குத: ॥**

(ச்லோகம்-14)

அந்தந்த விகாரங்களுடன் விகாரியும் உடனுக்குடன் தோன்றுகிறான், ஒடுங்குகிறான். எனவே, விகாரிக்கு விகாரங்களை இடைவிடாது உணரும் தன்மை எங்ஙனம் இருக்க முடியும்?

விகாரங்கள் விகாரியைச் சார்ந்துதான் இருக்கும். அதாவது குணம் குணியைச் சார்ந்திருக்கும். உண்மை என்ற பண்பு தனித்து நிற்பதன்று. உண்மை பேசுபவனிடம் அப்பண்பு இருக்கிறது. தர்மம் தர்மியைச் சார்ந்திருக்கும். விகாரங்களை அறியும் எனக்கு விகாரங்கள் இல்லை என்றால் விகாரங்கள் யாருக்குரியவை என்ற வினா எழுகின்றது.

விகாரங்கள் யாருக்குரியவை என்ற வினா எழுகின்றது. விகாரங்கள் அஹங்காரத்திற் குரியவையாகும். மாற்றங்களை நோக்குமிடத்து, குழந்தைத்தன்மை மறைந்து முதுமை தோன்றுகிறது.

இந்த மாற்றங்களை மூன்று காலங்களிலும் அறிவது அஹங்காரம். அஹங்காரம் ஸவிகார ரூபம். சைதன்யமாகிய நான் நிர்விகாரி. நிர்விகாரியாகிய நான் ப்ரதிபிம்ப சைதன்யத்தின் வாயிலாக விகாரியாகத் தோன்றுகிறேன். உண்மையில் விகாரத் தன்மை ப்ரதிபிம்பித்திற்குத்தான், எனக்கில்லை.

அந்தக் கரணமாகிய விகாரமும், ஸ்தூல, ஸ்தூல சரீரமாகிய விகாரமும் அஹங்காரமான விகாரிக்குத்தான். சுத்த சைதன்யமாகிய நிர்விகாரிக்கு இல்லை. மாற்றங்களை அனுபவிக்கிறவன் மாற்றங்களை அறிய இயலாது என்பதே உண்மையாகும்.

**ந ச ஸ்வஜந்மநாசம் வா த்ரஷ்டுமர்ஹதி கஸ்சந ।**
**தௌ ஹி ப்ராகுத்தராபாவசரமப்ரதமக்ஷணௌ ॥**

(ச்லோகம்-15)

எவனும் தனது பிறப்பையோ, அழிவையோ காண்பதற்கு இயலாது. தன் தோற்றத்தையும், ஒடுக்கத்தையும் தானே அறிவதில்லை பௌத்தர்களின் கொள்கை மேலும் மறுக்கப்படுகிறது. விகாரி, விகாரத்தையும் அறிகிறான். அதே சமயம் அவனும் மாறிக்கொண்டேயிருக்கிறான் என்பது பௌத்தர்களின் கோட்பாடாகும்.

கருங்கல், வைரக்கல் போன்று கற்களில் பலவகைகள் இருக்கின்றன. இவைகளுள் கல் என்ற தன்மையில் மாற்றமில்லை. ஆனால் ஒன்று ஒளியோடு கூடியது. மற்றது ஒளியின்றி இருக்கிறது.

அதுபோல மாற்றங்களும் மாற்றங்களை அறிபவனும் ஒன்றுதான். ஆனால் மாற்றங்கள், தாம் மாறுகிறோம் என்பதைஅறியாது. மாற்றங்களை அறிபவன் மாற்றங்களையும், தானே மாறுவதையும் அறிகிறான் என்பது பௌத்தர் கூற்றாகும்.

மாற்றங்களும் மாறிக்கொண்டி ருக்கின்றன. நானும் மாறிக்கொண்டி ருக்கிறேன். நான் என்பது

சேதன விகாரம். மாற்றங்கள் ஜட விகாரம். கல் என்ற இனத்தால் வைரக்கல்லும், கருங்கல்லும் ஒன்றுபடுவதுபோல் விகாரம் என்பதனால் நானும் மாற்றங்களும் ஒன்றுபடுதலைக் கொள்ளலாம் என்பது பௌத்தர் கொள்கையாகும். மேலும் விகாரியும் மாறுகிறான். தன் மாற்றத்தைத் தானே அறிந்து கொண்டிருக்கின்றான்.

ஒரு கணம் உள்ள ஆத்மா அடுத்தகணம் இல்லை என்பதும் அவர்களுடைய கோட்பாடாகும். இக்கருத்துக்களையெல்லாம் கூறப்படும் மறுப்பைக் காண்போம்.

"நீயே மாற்றமடைகிறாய் என்றால் மாறக்கூடிய பொருளை நீ எப்படி அறிந்து கொள்ள முடியும்? உன் மாற்றத்தையே உனக்குத் தெரிந்து கொள்ள இயலாதெனின் உன்னிடம் நிகழ்கின்ற மாற்றங்களை உன்னால் எப்படி அறியமுடியும்? உன் தோற்றத்தையும் ஒடுக்கத்தையும் நீ அறிவதில்லை. ஒவ்வொரு கணமும் மாறிக்கொண்டிருக்கும் உன்னால் மாற்றங்களை அறிய இயலாது" எனவரும் கருத்துக்கள் வாயிலாக பௌத்தர் கொள்கை மறுக்கப்படுகிறது.

எனவே மாறாத ஆத்மாவால்தான் மாற்றங்களை அறிந்து கொள்ள முடியும் என்பது தெளிவாகின்றது. ஆத்மாவாகிய நான் மாறாதவன். அஹங்காரத்தின் வாயிலாக மாற்றங்களை அறிகிறேன். அஹங்காரம் தன் மாற்றத்தைத் தானே அறிகிறது. அதற்கு வேறொரு பொருளான சைதன்யம் தேவையில்லை.

அஹங்காரம் இல்லாதபோதும் நான் இருக்கிறேன். நானே தோன்றி ஒடுங்கினால் இதை யார் அறிவது? நான் ஒரு பொழுதும் தோன்றாதவன், மாறாதவன் சுத்த சைதன்யம் மூன்று காலத்திலும் மாறாது இருக்கிறது.

நான் ப்ரஹ்மமாக இருக்கிறேன். உலகமும் உலகத்தில் நிகழும் நிகழ்ச்சிகளும் மாயத்தோற்றம் என்பது வேதாந்தக் கோட்பாடு. உலகம் இருப்பதை நாம் காண்கின்றோம். உலக நிகழ்ச்சிகள் நம்மைத் தாக்குகின்றன. எனவே, உலகம் மாயத் தோற்றம் என்ற கருத்தை ஏற்றுக்கொள்ள இயலவில்லையே என்ற எண்ணம் ஒரு சீடன் உள்ளத்தில் தோன்றியது. குருவைப் பணிந்து வணங்கித் தன்னுள்ளத்தில் எழுந்த ஐயத்தை நீக்குமாறு வேண்டுகின்றான்.

குரு சீடனை நோக்கி, "நீ உலகப் பொருள்களிலும் இந்த்ரிய விஷயங்களிலும் நம்பிக்கை வைத்துள்ளாய். அதற்கு மாறாக சாஸ்த்ரத்தில் நம்பிக்கை, குருவிடம் நம்பிக்கை, இறை நம்பிக்கை இருக்குமாயின் இவ்வுண்மை புரியும். உலகத் தோற்றம் கானல் நீர் போன்றது. கண்களுக்கு நீர் இருப்பது போன்ற அனுபவம் ஏற்படுகிறது. அறிவு நீர் இல்லை என்பதை உறுதி செய்கிறது. பின்னர் அது தோற்றமேயன்றி உண்மையில் அங்கு நீர் இல்லை என்ற உண்மை தெரிய வருகிறது.

நாம் கண்ணுக்கு முதலிடம் கொடுப்பதா அறிவுக்குக்கொடுப்பதா என்று சிந்திக்குமிடத்து அறிவுக்குத்தான் கொடுக்க வேண்டும். என்ற

முடிவுக்கு வருவோம். இந்த ஞானத்தை உள்ளத்தில் ஏற்றுக் கொண்டபின்னர் உலகம் எத்தகைய துன்பத்தையும் தராது" என்றார்.

இக்கருத்தை அடுத்த ச்லோகம் விளக்கு கின்றது.

**ந ப்ரகாசேऽஹமித்யுக்திர்யத்ப்ரகாசைகபந்தநா |**
**ஸ்வப்ரகாசம் தமாத்மாநமப்ரகாச: கதம் ஸ்ப்ருசேத்||**

(ச்லோகம்-16)

எந்த ஒளியினால், உணர்வினால் உறக்கத்திலும் நான் இருக்கிறேன் என்பது விளங்கவில்லை என்ற சொல்லானது விழிப்பில் கூறப்படுகிறதோ அது எப்போதும் இருக்கிறது. கனவில் இருந்தேன் என்பதனையும் அந்த ஒளிதான் உணர்த்துகின்றது.

விழிப்பில் நான் இருக்கிறேன் என்பது விளங்குகின்றது. உறக்கத்தில் நான் இருக்கிறேன் என்பது விளங்கவில்லை. அங்கு அதிஷ்டானம் இருக்கிறது. துணைக்கருவிகள் இல்லை. அறிவையும் அறியாமையையும் எது அறிந்து கொள்கிறதோ அதுவே ஆத்மா. ஒளிகளையெல்லாம் அறிவது எதுவோ அதுவே பேரொளி. ஸ்வயம்ப்ரகாசம். சூரியனுக்கும் ஒளிதருவது அதுவே. ஸ்வயம் ஸ்வரூபஜ்ஞானம் ஆத்மா.

உலகம் கண்ணுக்குப் புலப்படினும், அது மாயத்தோற்றமே என்று அறிந்து கொண்டால், உலகத் துன்பங்கள் நம்மை விட்டு நீங்கும். நன்கு ஆராய்ந்து பார்த்த பின்னர்தான், உலகம் இருந்தும்



இல்லாததற்குச் சமம் என்பது விளங்கும். வ்யாவஹாரிக த்ருஷ்டியில் உலகம் ஒரு காலத்தில் இருக்கிறது. பாரமார்த்திக த்ருஷ்டியில் மூன்று காலத்திலும் இல்லை.

பல்வேறு பிறவிகளில் கருவாகிய சிறையிலிருந்து, மற்றொரு சிறைக்குத் தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறோம். இடையில் உள்ளது இம்மண்ணுலக வாழ்வு. இந்நிலையில் மறுபடியும் சிறைக்குப் போகாது பார்த்துக் கொள்ள அறியாமையைப் போக்கி ஞானநெறியை மேற் கொள்ள வேண்டும்.

இந்த அறியாமையும், உலகமும் ஏன் தோன்றின என்பதற்கு விளக்கம் கூற இயலாது. அறியாமையை நீக்கத்தான் முயற்சி செய்ய வேண்டும். விசாரித்துப் பார்க்காதவரை மாயை இருக்கிறது. விசாரித்துப் பார்க்குமிடத்து காயமும், கருத்தும் மாயத்தோற்றம் என்பது தெளிவாகும் என்பதனைத் திருமூலர்,

"மாயை மறைக்க மறைந்த மறைபொருள்
மாயை மறைய வெளிப்படும் அப்பொருள்
மாயை மறைய மறைய வல்லார்க்குக்
காயமும் இல்லை கருத்தில்லை தானே"

என்று கூறுகின்றார்.

உண்மை இதுவாயினும் விசாரிக்காதவரை அனுபவத்தை மறுக்கமுடியாதுதான். அந்த அறியாமையாகிய இருள் ஞானம் என்ற சூரியன் உதிக்காதவரை உலகத்தை உண்மை என்றே நினைக்கிறது. ஞானநெறி நின்று விசாரித்துப் பார்த்தபின்னர் தோற்றம் என்பது விளங்கும்.



"யாருடைய அறியாமை ஆத்ம ஞானத்தால் அழிக்கப்படுகிறதோ, அவர்களுக்கு அந்த ஞானம் சூரியனைப் போன்று பரம்பொருளை விளக்குகிறது" என்று கண்ணன் கீதையில் கூறுவதும் இங்கு நினைக்கத்தகும்.

**ததாऽப்யாபாதி கோப்யேஷவிசாராபாவஜீவந: ।**
**அவச்யாயஸ்சிதாகாசே விசாரார்க்கோதயாவதி: ॥**

**(ச்லோகம்-17)**

ஆனாலும் யாது காரணத்தாலோ அறிவுப் பெருவெளியில் உண்மையை ஆராய்ந்து அறியாத வரையில் வாழ்கின்றது. ஆராய்ச்சியினால் உருவாகிய ஞான சூரிய உதயத்தினால் முடிவு பெறுவதுமான இந்த அறியாமையாகிய மூடுபனியானது தோன்றுகிது.

ஆத்மா நிர்விகாரம் என்று நிறுவிய பின்னரும், எப்படியும் அறியாமை ஆத்மாவில்தானே இருக்கிறது என்ற வினா எழுகின்றது. அறியாமை அகன்று ஞானம் வந்த பின்னரும் இந்த உலகம் விளங்கிக் கொண்டுதானே உள்ளது. இதனை எப்படி மாயத்தோற்றம் என்று கூறுவது? என்ற ஐயம் உண்டாகின்றது.

உலகம் அவ்வாறு விளங்கிக் கொண்டுதான் இருக்கும். அதனைத் தோற்றம் என்று அறிவது தான் ஞானம். அஞ்ஞானம் இரண்டு வகைப்படும். மூல அஞ்ஞானம் என்பது நாம் அனுபவிக்கும் உலகம். இது ஈச்வர ஸ்ருஷ்டி. அடுத்தது தூல அஞ்ஞானம் என்பது இந்த உலகை உண்மை என்று நினைப்பதாகும். இது ஜீவ ஸ்ருஷ்டி.



ஞானத்தால் இவ்வுலகம் உண்மை என்ற எண்ணத்தைத்தான் நீக்குகிறோம் இந்த ஞானத்தை அறிந்து அநுபவிக்கவே இந்த உடல், மனம் முதலியன வேண்டும். ஞானம் வந்த பின்னரும் உலக இன்ப துன்பங்கள் இருக்கின்றன. ஆனால் அவற்றில் விருப்பும், வெறுப்பும் இருக்காது. தூல அஞ்ஞானம் நீங்கிவிடுகிறது.

குரு வாயிலாக தத்துவக்கருத்துக்களைக் கேட்டறிந்து, சிந்தித்து, அவற்றை நம் வயமாக்கிக் கொள்ளுமிடத்து, அதாவது ச்ரவணம், மனனம், நிதித்யாஸனங்கள் வாயிலாக தூல அறியாமையை நீக்கிவிடலாம்.

கண்ணன் கீதையில் தன்னை யார் நாடுகிறார்களோ அவர்கள் மாயையை வெல்வார்கள் என்று கூறுகின்றார். இங்கு தன்னை என்பது நிர்க்குண ப்ரஹ்மத்தை என்று கொள்ளுதல் வேண்டும்.

இல்லாததை இருப்பது போல் தோற்றுவது மாயை. எது ஆராய்ந்து நோக்குதற்கு முன்னர் இருந்து, ஆராய்ந்து பார்த்த பின்னர் இல்லாமல் போகுமோ அது மாயை. அதன் இலக்கணம் எத்தகையது என்று விளக்க முடியாது. பரம்பொருளுடன் சேர்ந்தது என்றும், சேர்ந்ததன்று என்றும் கூறமுடியாது. வடிவம் இருக்கிறது என்றும் இல்லை என்றும் கூறமுடியாது என்று சங்கரர் இதன் இயல்பு பெரிய வியப்பாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

மாயையை விளக்க முடியாது என்பதனை

விளக்கமாகப் புரிந்து கொள்ள வேண்டும். தூல அஞ்ஞானம் நீங்கிய பின்னார் மாயை மாயாகார்யமாகிய இந்த உலகம் உன்னை பாதிக்காது.

எந்தப் ப்ரகாசத்தின் துணை கொண்டு உறக்கத்தில் நான் இல்லை என்று சொல்கிறாயோ அந்தப் ப்ரகாசம் யார்? அதுவே தான் நீ, ஸாக்ஷி, ப்ரஹ்மம். தொடர்ந்து பெய்யும் மழை, மிகுந்த வெயில் இவைகளினின்று நம்மைக் காத்துக் கொள்ள குடை உதவுகின்றது. அதுபோல ஞானம் என்னும் குடை உலகத்துன்பங்கள் நம்மைப் பாதிக்காமல் காக்கின்றது.

ஸ்வரூப ஞானமாகிய ஆத்மாவை இந்த மாயா உலகம் என்ன செய்ய முடியும்? இருப்பினும் இந்த சைதன்யமாகிய ஆகாசத்தில், அறிவுப் பெருவெளியில் அறியாமை, மாயை ஆகிய மூடுபனி படர்ந்துள்ளது. விசாரம் பண்ணாதவரை, ஆராய்ந்து பார்க்காதவரை அதாவது உண்மையைத் தெரிந்து கொள்ளாதவரை உயிரோடிருக்கும் இந்த மாயையாயனது, ஆராய்ந்து பார்த்து அதன் வழிவரும் ஞானத்தைப் பெற்ற பின்னர், சூரியன் வந்ததும் மூடுபனி இருந்த இடம் தெரியாது மறைவது போல மறைந்து விடும்.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு



என்றார் வள்ளுவப் பெருந்தகை. உடலின் தன்மையைக் கூறுமிடத்துத் தாயுமானவர்,

பொய் எல்லாம் ஒன்றாப் பொருத்தி வைத்த பொய் உடலை

மெய் என்றால் மெய்யாய் விடுமோ பராபரமே

என்கிறார்.

அழிந்துபோம் உடலுக்கு மெய் என்ற பெயரால் மட்டுமே மெய்த்தன்மை வராது. ஆயினும் மெய்ப்பொருளை இவ்வுடலில் தான் அறிந்து கொள்ள வேண்டும். ஸாத்யத்தை (அதாவது அடையும் பயனை) சாதனையில் (பயனை அடை.வதற்கு மேற்கொள்ளும் நெறியில்) ஏற்றிக் கூறும் மரபிற்கேற்ப உடல் மெய் என்று கூறப்படுகிறது. இது இறைவனைக் காட்டிக் கொடுக்கும் குருவையே இறைவன் என்று கூறுவது போன்றதாகும்.

உடலாகிய ஸாதனம் மெய்ப்பொருளை அறிந்து கொள்ளப்பயன்படுகின்றது. அதனால் அது மெய்யென்ற பெயருடையதாயிற்று.

ஞானத்தால் இவ்வுலகம் மாயத்தோற்றம் என்று அறிந்து கொண்டால் மன நிம்மதி கிடைக்கும். இல்லையெனின் துன்பங்கள் வந்து கொண்டேயிருக்கும். அத்வைத தத்துவ நெறியினரை மாயாவாதிகள் என்று மற்ற தத்துவவாதிகள் கூறுவர். சித்தாந்த நெறி கடவுள், உயிர், பாசம் ஆகிய மூன்றும் உண்மையே என்று கூறுகின்றது.

வ்யாவஹாரிக திருஷ்டியில் வேதாந்தமும் உலகம் உண்மை என்றுதான் கூறுகின்றது. பாரமார்த்திக த்ருஷ்டியில் தான் அது மாயத்தோற்றம் என்று குறிப்பிடுகின்றது. பாரமார்த்திகத்தைப் புரிந்து கொண்டு வ்யாவஹாரிக



த்ருஷ்டியில் வாழ வேண்டும் எனபதே வேதாந்தத்தின் கோட்பாடாகும். மேலும் வேதாந்தம் உலகை அசத்து அதாவது இல்லாதபொருள் என்று கூறவில்லை. மித்யா என்று கூறுகின்றது.

மித்யா என்பது அறியாமையில் இருக்கும், அறிவு வந்ததும் மறையும். சூரியன் உதிக்கிறது மறைகிறது என்பது வ்யாவகாரிக த்ருஷ்டியில் ஸத்யம். ஆனால் சூரியன் இருந்த இடத்திலேயே இருக்கிறது என்பது பாரமார்த்திக த்ருஷ்டியில் ஸத்யம். சூரியன் உதிக்கிறது மறைகிறது என்பது சத்தியமும் அல்ல, அசத்தியமும் அல்ல அது மித்யா எனப்படுகிறது. இந்த கங்கைக் கரையும், இயற்கைக் காட்சியும் அழகாகக் காட்சி அளிக்கின்றது. இதனை பொய் எனலாமா? என்று தோன்றும். ஆழ்ந்து ஆராய்ந்து பார்க்குமிடத்து உண்மை விளங்கும்.

எனவே விசாரித்துப் பார்க்காதவரையில் வாழ்ந்து கொண்டிருக்கும் அறியாமை விசாரணை பண்ணிப் பார்த்த பின்னர் பெறும் ஞானத்தால் சூரியனைக் கண்டு மறையும் மூடுபனிபோல மறைந்து போகும்.

இந்த உலகம் மாயத்தோற்றம் என்பதனை வேத ப்ரமாணத்தை வைத்துக் கொண்டு சொல்லுகிறீர்கள். வேதங்களும், அதன் கருத்துக்களும் இந்த மாயைக்குள்தானே இருக்கின்றன என்ற வினா எழுகின்றது. ஞானம் வந்த பின்னர் அவையும் மித்யா என்பதே உண்மையாகும்.

நான் ப்ரஹ்மமாக இருக்கிறேன் என்பதும் மித்யா. நான் ப்ரஸ்மம் என்பதுதான் உண்மை. கனவில் ஒரு புலி வந்து நம்மீது பாய்கிறது. உடனே விழிப்புண்டாகிறது. அப்போது புலி காணப்படவில்லை. கனவில் வந்த புலி உண்மையா? பொய்யா? கனவில் உண்மையாக இருந்தது. இப்போது இல்லை.

அதுபோல வேதாந்தம் உண்மையைச் சொல்லிக் கொடுத்துவிட்டுப் பின்னர் தானும் மாயத்தோற்றமே என்று காட்டுகின்றது. குருபரம்பரையும் இப்படித்தான் என்பதனையும் குருவின் அருளால்தான் அறியவேண்டும். வேத ப்ரமாணமும் கனவில் தோன்றிய புலிபோல நீங்கிவிடும்.

**ஆத்மாஜ்ஞாநமஹாநித்ராஜ்ரும்பிதேஸ்மிஞ்ஜகந்மயே |**
**தீர்க்கஸ்வப்நே ஸ்புரந்த்யேதே ஸ்வர்கமோக்ஷாதி விப்ரமா: ||**

(ச்லோகம்-18)

ஆன்மாவைப் பற்றிய அறியாமை என்னும் மாபெரும் உறக்கத்தில் தோன்றி நீண்ட கனவாகிய இவ்வுலகில் விண்ணுலகமும் வீடுபேறு முதலான மாயத் தோற்றங்களும் தோன்றுகின்றன.

உலகில் நடைபெறும் முறையான அற வாழ்வு வித்யாமாயை எனப்படும். கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என வாழ்வது அவித்யா மாயை எனப்படுகிறது. கனவில் ஒரு சிறிய உலகத்தைக் காண்கின்றோம். நனவில் நாம் காணும் உலகமும் கனவில் காணும் உலகத்தைப் போன்றதுதான்.



கனவுலகம் கனவு காணும் நேரத்தில் காண்பவனுக்கு மட்டும் உண்மையாக உள்ளது. இது ப்ராதிபாஸிக ஸத்யம் எனப்படுகிறது. நனவாகிய உலக வாழ்வு எல்லோருக்கும் பொதுவாக இருப்பதால் இது வ்யாவகாரிக ஸத்யம் எனப்படுகிறது. இக்கருத்தை ஆராய்ந்து பார்க்குமிடத்து உலகை அனுபவிக்கும்போதே அதை அறிவு வாயிலாக மாயத்தோற்றம் என்று நீக்குகிறோம்.

அடுத்து போக்யம் அதாவது அனுபவிக்கப்படும் பொருளும், போக்தா எனப்படும், அனுபவிப்பவனும் மித்யா எனப்படும்.

**ஜடாஜடவிபாகோऽயமஜடே மயி கல்பித: ।**
**பித்திபாகே ஸமே சித்ரே சராசாரவிபாகவத் ॥**

(ச்லோகம்-19)

உயிருள்ள பொருள்களும், உயிரற்ற பொருள்களும் திரையில் காணப்படும் காட்சிகள் போலவும், சுவரின்மேல் வரையப்பட்ட வரைபடங்களைப் போலவும் தோற்றங்களேயாம். அறியாமையால் மாயையால் என் மீது போக்யமும், அனுபவிக்கும் தன்மையும் வந்துள்ளன.

சீடன் ஒருவன் இருந்தால் தான் குரு என்ற ஒருவர் இருக்க இயலும். பொருள் இல்லை என்றால் அனுபவிப்பவனும் இல்லை. உயிருள்ளவையும், உயிரற்றவைகளும் நான் அல்ல. நான் பரிபூரண சைதன்யம் மாயையினால், அறியாமையால் என்னிடம் இவை கற்பிக்கப்பட்டிருக்கின்றன. செயல்புரியும்

தன்மையும், பலனை அனுபவிக்கும் தன்மையும் எனக்கில்லை.

விகாரமற்ற வெண்ணிறமான சுவர் இருக்கிறது. அது அசையாதது. அதன்கண் மலைகள், ஆறுகள், விலங்கினம், பறவையினம் போன்ற பல்வேறு சித்திரங்கள் தீட்டப்படுகின்றன. சினிமாத்திரையில் பல்வேறு காட்சிகளைக் காண்கின்றோம். நல்லவை தீயவை அனைத்தும் காட்டப்படுகின்றன. திரை விகாரமின்றி அசையாது இருக்கிறது.

சுவரும், திரையும் போன்று நிர்விகாரமாக, சுத்த சர்வகதமான சைதன்யம் இருக்கின்றது. சுத்த சைதன்யம் மாறாமல் இருப்பதால்தான் ஸமம் எனப்படுகிறது. மாறிவரும் உலகம் விஷமம் எனப்படுகிறது.

கடலிலுள்ள நீர் ஸமம் என்றும் மாறிவரும் அலைகளும் நுரைகளும் விஷமம் என்றும் கூறப்படுகின்றன. விஷமம் அனைத்தும் மாயத்தோற்றமே. எனவே, அறியப்படும் பொருள் இல்லையாதலால், அறிபவன் என்ற தன்மையும் இல்லை என்பது அறியலாகிறது.

அடுத்து, ஸாக்ஷி என்று கூறுமிடத்து, ஸாக்ஷிதா என்று ஒன்று இருக்க வேண்டுமல்லவா என்ற வினாவிற்கு விளக்கம் தரப்படுகின்றது.

**சைத்யோபராகரூபா மே ஸாக்ஷீதாபி ந தாத்விகீ ।**
**உபலக்ஷணமேவேயம் நிஸ்தரங்கசிதம்புதே: ॥**

(ச்லோகம்-20)

ஸாக்ஷியாக இருக்கும் தன்மையும் எனக்கு மாயையினால் புத்தியோடு தொடர்பு கொள்வதால் தோன்றும் வடிவமாகும். உண்மையில் எனக்கு ஸாக்ஷித்தன்மையும் இல்லை. இந்த ஸாக்ஷித் தன்மையும் வேறுபாடாகிய அலைகள் அற்ற தூய உணர்வுக் கடலினை குறிப்பாக உணர்த்துவதற்குத்தான். நான் ஸாக்ஷியாக இருக்கிறேன் என்ற தன்மையும் என்னிடத்தில் இல்லை.

சைதன்யம் ஸர்வகதம் எனப்படுகிறது. அதாவது காலத்தாலும், இடத்தாலும், பொருளாலும் வரையறுக்கப்படாதது. அந்தக் கரணத்துடன் சேர்ந்திருப்பதால்தான் ஸாக்ஷி என்ற நிலையைக் கூறுகின்றோம். உண்மையில் ஸாக்ஷியாக இருக்கும் தன்மையும் ஆத்மாவுக்கு இல்லை. அறியாமை, எண்ணங்கள் ஆகிய எந்தவிதமான அலைகளும் இல்லாத ஸமுத்ரம் சைதன்யம். அறியாமை, எண்ணங்கள் முதலானவை இல்லாத அந்த சைதன்யத்தை விளங்க வைப்பதற்காகத்தான் ஸாக்ஷி என்று கூறுகின்றோம்.

உண்மையில் சைதன்யம் ஸாக்ஷி அன்று. அறியப்படுபொருள் தோற்றமாதலால் அறிபவன் என்னும் தன்மையும் இல்லை. ஸாக்ஷ்யம் தோற்றமாதலால் ஸாக்ஷியும் தோற்றமே என்பது உறுதியாகின்றது. உலகிற்குக் காரணம் ப்ரஹ்மம் அன்று. காரணம் கற்பித்தால் நிர்விகாரம் என்பது பொருந்தாது

அடுத்து, உடம்பு தோன்றுவதாலும், மறைவதாலும் எனக்குக் குறையில்லை என்பது

கூறப்படுகிறது.

**அம்ருதாப்தேர்நமேஜீர்ணிர்ம்ருஷாடிண்டீரஜந்மபி:**
**ஸ்படிகாத்ரேர்ந மே ராக: ஸ்வாப்நஸந்த்யாப்ரவிப்ரமை:**

(ச்லோகம்-21)

நான் அமுதக்கடலாக இருக்கின்றேன். என்னிடத்தில் நுரைகளாகத் தோன்றி மறையும் உடல்கள் என்னை ஒன்றும் செய்யா. நான் பெரிய ஸ்படிகமலை. நான் பரிபூரண ஞான வடிவம். அறியாமையாகிற மாலை நேரத்து மேகங்களால் உண்டாகும் மாறுபாடுகள், நிறத்தோற்றங்கள் எனக்கில்லை.

நான் அழிவற்ற சச்சிதானந்தக்கடல். உடல், மனம் அந்தக்கரணங்கள் அழியும் தன்மையன. ஒரு பறவை இன்ப துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறது. மற்றொரு பறவை அதைப்பார்த்துக் கொண்டிருக்கிறது. பார்த்துக் கொண்டிருக்கும் பறவைக்கு இன்ப துன்பம் கிடையாது.

கடலில் நீர்க்குமிழிகள் போன்று அமுதக்கடலாகிய என்னிடத்தில், உடல்கள் தோன்றி மறைகின்றன. இருப்பாக இருக்கும் நீரான எனக்குக் குறையுமில்லை, அழிவுமில்லை. அழிவை ஏற்படுத்தவும் முடியாது.

நான் தூய ஸ்படிக மலையாக உள்ளேன். அது பரிபூரண ஞான ஸ்வரூபத்தைக் குறிக்கின்றது. அந்த மலையின்கண் மாலை நேரத்துச் செஞ்சுடர்கள் படிந்து, மேகங்கள்



தவழ்ந்து செல்லும்போது, ஒரு வகையான நிறத்தை உண்டு பண்ணுகின்றது. உண்மையில் மலைக்கு எத்தகைய மாற்றமும் இல்லை. அதுபோல அறியாமையாகிய இருள் சச்சிதானந்தமாகிய என்னைத் தீண்டாது.

அடுத்து, சச்சிதானந்தம் என்பது பரம்பொருளுக்குக் குணம் அன்று. சச்சிதானந்தமே பரம்பொருள் என்பது விளக்கப்படுகிறது.

**ஸ்வரூபமேவ மே ஸத்வம் நது தர்மோ நபஸ்த்வவத் ।**
**மதந்யஸ்ய ஸதோऽபாவாந் ந ஹி ஸஜ்ஜாதிரிஷ்யதே ॥**

(ச்லோகம்-22)

ஆகாயத்தைப் போன்று இருப்புத்தன்மையானது எனது ஸ்வரூபமேயாகும். தர்மமன்று. அதாவது என்னைச் சார்ந்த பொருளன்று. எனக்கு வேறாக இருப்பானது இன்மையினால் இருப்பதாவது இனமாகக் கருதப்படுவதில்லை.

இருப்பாக இருக்கும் தன்மையாகவே நான் இருக்கிறேன். எனக்கு வேறாக இருப்புத் தன்மையுடைய மற்றொரு பொருள் இல்லை. ஆகாயத்திற்கு ஆகாயத்தன்மை எப்படி இனமாக இல்லையோ அப்படி பரம்பொருள் வேறானது அல்ல. ஸச்சிதானந்தம் பரம்பொருளின் இயல்பு என்று கூறும் தத்துவங்களும் உள்ளன.

ஆனால் வேதாந்தக் கோட்பாடு சச்சிதானந்தமே ப்ரஹ்மம் என்பதாகும். தீயின் தன்மை வெம்மையாக இருப்பது. இத்தன்மையை தீயினின்று பிரிக்க இயலாது. வெம்மை நெருப்பின் குணமாக இருந்தால் பிரிக்க முடியும். குணம்



இல்லாமல் குணி இருப்பான்.

இளமை ஒருகாலத்தில் இருந்தது. இப்போது இல்லை ஆயினும் நான் இருக்கிறேன். இளமையைப் போன்று ஸத்வம் இருந்து போவதன்று. ஸத்தேதான் ப்ரஹ்மம். ஆகாயத்திற்கு வேறாக மற்றொரு ஆகாயம் இல்லாததால் அது இனமற்றது என்று சொல்லப்படுகின்றது.

ஆகாயத்திற்கு ஆகாயத்தன்மை எப்படி குணமாக இல்லையோ அதுபோல் பரம்பொருளான ஸத்துக்கு வேறான இன்னொரு ஸத் இல்லை. பரம்பொருளுக்கு வேறான ஸத் ஒன்று இல்லாததால், ஸத்வம் அதாவது இருப்பு இனமற்றது.

இருப்புத்தன்மை எல்லாவற்றிலும் வ்யாபித்திருக்கிறது. இருப்புத்தன்மையுடைய மற்றொரு பொருள் இல்லாததால் அது இனமற்றது என்று கூறப்படுகின்றது. நம் ஸ்வரூபம் காலம் கடந்த நிலையாகும்.

பாரதியார் தாம் கால காலன் என்பதை அறிந்தார். காலனை நோக்கி, "காலா என் அருகே வாடா" என்று கூறும் உறுதிப்பாட்டைப் பெற்றார். இவ்வாறு இருப்பாகிய ஸத் ஸ்வரூபம் நான் என்று கூறிய ஆசிரியர் அடுத்து ஞானமும் எனது ஸ்வரூபமே என்று கூறுகின்றார்.

**ஸ்வரூபமேவ மே ஜ்ஞானம் ந குண: ஸ குணோயதி ।**
**அநாத்மத்வமஸத்வம் வா ஜ்ஞேயாஜ்ஞேயத்வயோ: பதேத் ॥**
(ச்லோகம்-23)



தூய அறிவானது (உணர்வானது) எனது ஸ்வரூபமேயாகும். குணமன்று. அது குணமாகக் கருதப்படுமானால் அறியப்படுகிற அல்லது அறியப்படாததாகிய தன்மையினால் அநாத்மாவாகவோ (ஜடமாகவோ) இல்லாத பொருளாகவோ ஆகிவிடும்.

அறியப்படுபொருள் அறியப்படாத பொருள் ஆகியவற்றை அறியும் ஸ்வரூபமாக நான் இருக்கிறேன். ஸத்யம், ஞானம், ஆனந்தம் ஆகிய மூன்றும் ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம். இனமோ, குணமோ, தர்மமோ அல்ல. உள்ளது ஒரே பொருள் எனின் அதற்கு இனமில்லை. எடுத்துக்காட்டாக ஆகாயத்திற்கு இனம் இல்லை. குடத்துக்குள் இருக்கும் ஆகாயமும், புறத்தே இருக்கும் ஆகாயமும் ஒன்றுதான்.

இருப்பு அதாவது "ஸத்" ஒன்றுதான். உபாதி த்ருஷ்டியில்தான் வேற்றுமைகள் காணப்படுகின்றன. ஸத்வம் இருப்புத் தன்மை உடையதன்று. இருப்பே ஸத்வம் அதுவே ப்ரஹ்மம். உணர்வும் அதாவது ஞானமும் ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம். தீயின் தன்மை வெம்மை. நீரின் தன்மை குளிர்ச்சி. வெம்மை யில்லாமல் நெருப்பில்லை. குளிர்ச்சியில்லாமல் நீரில்லை. அதுபோல் ப்ரஹ்மமும், ஞானமும் பிரிக்க முடியாதவை. ஞானம் ப்ரஹ்மத்தின் குணமன்று. குணம் என்றால் கோபம், வெறுப்பு போன்று வந்து இருந்து நீங்கக் கூடியது.

மேலும் ஞானம் குணமென்றால் அது அறியப்படு பொருளாகும். அறியப்படுவதால் அது

அநாத்மா ஆகிவிடும். ஒரு பொழுதும் அறியவே முடியாதென்றால் முயற்கொம்புபோல், இல்லாத பொருளாகி அஸத்தாகிவிடும். வேதாந்தம் படித்து ப்ரஹ்மத்தைத் தெரிந்து கொள்வதன்று. தேவையில்லாதவற்றை நீக்கி ஏற்கனவே இருக்கும் ப்ரஹ்மத்தை அறிந்து கொள்வதாகும். நானே அறிவு ஸ்வரூபமாக, சித் ஸ்வரூபமாக இருக்கிறேன். உணர்வே நான் என்பதனைத் தாயுமானவரும்,

**பாராதி பூதம் நீ அல்லை — உன்னிப்**
**பாரிந்திரியம் கரணம் நீ அல்லை**
**ஆராய் உணர்வு நீ என்றான் — ஐயன்**
**அன்பாண் உரைத்த சொல் ஆனந்தம் தோழி**

என வரும் பகுதியில் தெளிவுறக் கூறுகின்றார்.

நான் உணர்வு வடிவமாக இருக்கிறேன் என்று எண்ணுவதற்கும், கூறுவதற்கும் மனம் தேவை. அப்படிச் சொல்லாவிடினும், எண்ணாவிடினும் நான் உணர்வாக இருக்கிறேன் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஆத்மா சுய ஒளியுடையதாகையால் தன்னை விளங்கிக் கொள்ள மற்றொருபொருள் தேவையில்லை. நான் ஸத் ஸ்வரூபம், நான் சித் ஸ்வரூபம். ஸத்தே சித் சித்தே ஸத். எனவே இரண்டு பொருள்கள் இல்லை என்பது தெளிவாகின்றது.



**அஹமேவ ஸு²கம் நாந்யதந்யச்சேந்நைவ தத்ஸு²கம் ।**
**அமதர்த்தம் ந ஹி ப்ரேயோ மதர்த்தம் ந ஸ்வத: ப்ரியம் ॥**

(ச்லோகம்-24)

நான் இன்ப வடிவினன். இன்பம் எனக்கு வேறாக இருக்குமானால் அது இன்பமன்று. இன்பம் எனக்கில்லையெனில் என் அன்பிருக்காது. இன்பம் என் பொருட்டாயின் அது தானே யாண்டும் அன்புக்குரியதாகும். எனவே நானே இன்பவடிவினன்.

அடுத்து, நான் இன்ப வடிவம் என்பது கூறப்படுகிறது. ஆத்மாதான் ஆனந்த வடிவம். இருப்பு, உணர்வு, இன்பமே ப்ரஹ்மம். எங்கும் நிறைந்தது. அறிவுப்பெரு வெளியாக இருப்பது. ஆனந்த வடிவமாக இருப்பது.

ஆனந்தமும் எனக்கு குணமன்று, நானே ஆனந்தம். ஆனந்தத்தைப் பற்றிக் குறிப்பிடும் தாயுமானவர்,

**விளையும் சிவானந்த பூமி—அந்த**
**வெட்ட வெளி நண்ணித் துஷ்ட இருளாம்**
**களையைக் களைந்து பின் பார்த்தேன்—ஐயன்**
**களையன்றி வேறொன்றும் கண்டிலன் தோழி**

**அன்றென்றும் ஆமென்றும் உண்டோ—உனக்கு**
**ஆனந்தம் வேண்டின் அறிவாகிச் சற்றே**
**நின்றால் தெரியும் எனவே—மறை**
**நீதிஎம் ஆதி நிகழ்த்தினான் தோழி**

என்கிறார்.

ஆனந்தத்தை அடைய வேண்டுமென்று எண்ணலாகாது. நம்மை வந்தடையும் பொருள்களெல்லாம் ஒரு காலத்தில் நம்மை விட்டு நீங்கும் என்பது உலகியற்கை. ஸமாதியில்

ஆனந்தம் அனுபவிக்கின்றோமே என்றால், அந்நிலையில் ப்ரதிபிம்பானந்தம் கூடுதலாக இருக்கலாம். ப்ரஹ்மானந்தமோ யாண்டும் இருப்பது.

யாண்டும் உணர்வு வடிவமாக, இன்ப வடிவாக இருக்கும் ஆத்மாவைப் புரிந்து கொண்டு, அந்த உண்மையை நிலையை புரிந்து கொள்ள வேண்டுமென்பதே வேதாந்தத்தின் கோட்பாடாகும். "ஒன்று பொருள் அஃதின்பம் என்று உணர்ந்தாய் தாயுமானவனே" என்றார் பாரதியார்.

உலகப்பொருள்களில் இன்பம் இருக்கின்றது என்று எண்ணுகின்றோம். அப்படியானால் ஒரு பொருள் இன்பமாக இருந்தால் எல்லாக் காலத்திலும், எல்லா இடத்திலும் இன்பம் இருக்க வேண்டும். இல்லையாயின் இன்பம் அதிலுள்ளது என்று கூறமுடியாது. மேலும் எல்லோர்க்கும் ஒரே அளவில் இன்பம் இருக்க வேண்டும். அவ்வாறன்றி அனுபவிப்பவனது மனதைப் பொறுத்து வேற்றுமை அமைகிறது.

"உலகத்து இன்பங்களெல்லாம் துன்பத்திற்குக் காரணமாக அமைகின்றன. அவ்வின்பங்களுக்குத் துவக்கமும் இறுதியும் உள்ளன. அறிவாளி அந்த இன்பத்தை விரும்ப மாட்டான்" என்று கண்ணன் கீதையில் கூறுவதும் இங்கு நினைக்கத்தக்கது.

பொருள்களே இல்லாமல் ஸுகமாகத் தூங்குகிறோம். எனவே பொருள்களில் இன்பம் இல்லை என்று கூறுதற்கு இதுவும் ஒரு சான்றாகின்றது.

ரிஷீகேசத்தில் ஸ்வாமிகள் ஒருவர் கங்கைக் கரையில் ஆனந்தமாக வீற்றிருந்தார். அவரது அருளாசியால் நல்ல ஊதியத்தைப் பெற்ற ஒருவர் இரண்டு தங்கக் கடகங்களை அவருக்குக் காணிக்கையாக வைத்து வணங்கினார். நிலம் சரிவாக இருந்ததால் ஒரு கடகம் உருண்டு கங்கையில் விழுந்தது. அவன் அலறிக்கொண்டு எங்கு விழுந்தது என்று கேட்க, துறவி மற்றொன்றை எடுத்து, அதோ அங்குதான் விழுந்தது என்று எறிந்தார்.

ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும் உறுதியைக் காண்கிறோம். "தலைப்பட்டார் தீரத் துறந்தார்" "அற்றது பற்றெனின் உற்றது வீடு" எனவரும் வள்ளுவப் பெருந்தகையின் கூற்றுக்களும் இங்கு நினைக்கத்தகும். இவையாவும் பொருள்களில் இன்பம் இல்லை என்பதை நிறுவுகின்றன. ஆயினும் உலகப் பொருள்கள் இன்பம் தருகிற மாதிரித் தெரிகிறதே? அதன் காரணம் என்ன என்று நோக்கும் போது அது தான் மாயை என்று கூறப்படுகின்றது.

நாய் எலும்பைக் கடித்துக் கடித்துச் சுவைக்கின்றது. அதைக் கடிப்பதால் தனது வாயிலிருந்து வரும் இரத்தத்தையே சுவைத்துக் கொண்டு அது எலும்பிலிருந்து வருவதாக எண்ணுகிறது. இதுபோல சில நேரங்களில் சில சூழ்நிலைகளில் நமது நல்வினைக்கேற்ப சில இடங்களில், சில மனிதர்களிடத்தில், சில பொருள்களில் தொடர்பு கொள்ளும்போது நம் உள்ளத்தில் உள்ள ஆனந்தம் பிரதிபலிக்கிறது.



அதை நாம் அனுபவிக்கும்போது அந்த ஆனந்தம் அங்கிருந்து, இங்கிருந்து வருகிறதென்று எண்ணுகிறோம்.

மனம் அமைதியாகிற காரணத்தால் ஆனந்தம் புலப்படுகிறது. உண்மையில் நமது ஆனந்தமே அங்கு ப்ரதிபலிக்கிறது. நாமே ஆனந்த ஸ்வரூபம் என்று அறிந்து கொள்ள வேண்டும்.

"அஹம் ஏவ ஸுகம், அந்யத் ந ஸுகம்" நானே இன்ப வடிவம், எனக்கு வேறாக இன்பம் இல்லை. நான் ஸத்தாகவும், சித்தாகவும், ஆனந்தமாகவும் இருக்கிறேன் ஸத்தை உடையவனாக, சித்தை உடையவனாக, ஆனந்தத்தை உடையவனாக அன்று, இருப்பு, உணர்வு இன்பமே பரம்பொருள் என்று அறிதல் வேண்டும்.

அடுத்து ஸத், சித், ஆனந்தம் என்பவை மூன்று பொருள்கள் அல்ல. ஒரே பொருள் தான் என்பது நிறுவப்படுகிறது.

**நஹி நாநாஸ்வரூபம்ஸ்யாதேகம் வஸ்து கதாசந ।**
**தஸ்மாதகண்ட ஏவாஸ்மி விஜஹஜ்ஜகதீம் பிதாம் ॥**

(ச்லோகம்-25)

ஒரு பொழுதும் ஒரு பொருளானது பல்வேறு வடிவங்களாகத் தோன்றாது. ஆகவே உலக வேற்றுமைகள் நன்கு நீங்கிய பிளவுபடாத பொருளாகவே நான் இருக்கிறேன். ஒருபொழுதும் ஒரு பொருளாகிய பரம்பொருள் பல்வேறு வடிவங்களை எடுப்பதில்லை. எங்கும் நிறைந்தது

ஸத். அறிவாக இருப்பது சித் எல்லோராலும் விரும்பப்படுவது ஆனந்தம்

கருப்பாக பருமனாக, கண்ணாடி அணிந்திருப்பவன் என்பது ஒரே ஆளைக்குறிப்பது போல் சச்சிதானந்தம் என்பது ஒரே பொருளைக் குறிக்கின்றது. யாண்டும் ஒரே பொருளாக இருப்பது பரம்பொருள். பல்வேறு வடிவங்களை உடையதாக இல்லை.

கயிறு ஒன்று ஒருவனுக்குத் தண்ணீர்க்கோடு போலவும், மற்றொருவனுக்குப் பாம்பு போலவும், அடுத்தவனுக்குக் குச்சி போலவும் காணப்படுகிறது. கம்பு ஒன்று காவல் துறையினருக்குத் திருடன் போலவும், திருடனுக்குக் காவல்காரன் போலவும் காணப்படுகிறது.

ஒரே பொருளை பலர் பல்வேறு நிலைகளில் காண்பதற்குக் காரணம் அறியாமையாகும். எனவே அறியாமையின் விளைவாகிய உலக வேற்றுமைகளையெல்லாம் அறவே நீக்கி, குரு அருளால், இறையருளால் அகண்டமான பிளவற்ற பொருளே ஆத்மா என்றறிதல் வேண்டும்.

சச்சிதானந்தம் பிளவற்றது, இனமற்றது, அறியப்படு பொருளும் அன்று. முக்காலத்திலும் பரம்பொருள் ஒரே பொருள்தான். பல்வேறு வடிவங்களை எடுப்பதில்லை.



பரோக்ஷதாபரிச்சேதசாபல்யாபோஹநிர்மலம் ।
ததஸிதிகிராலக்ஷ்யமஹமேகரஸம் மஹ: ॥

(ச்லோகம்-26)

இறைவன் எங்கோ இருக்கின்றான். நீ வேறு அவன் வேறு என்ற வேறுபாட்டை "தத்வம் அஸி" நீ அதுவாக உள்ளாய் என்ற கூற்று நீக்குகிறது. ஆராய்ந்து பார்க்கும் வரை இருந்து, ஆராய்ந்து பார்த்தபின்னர் விலகுவது மாயை. நான் புண்ணிய பாவங்கள் அற்றவன். ஒரே சைதன்யமாக, ஏகரஸமாக இருக்கின்றேன் கடவுள் எங்கோ இருக்கிறார். அவனைப் பார்க்க முடியாது என்று கூறப்படும் நிலைகளையும், ஆண்டவன் என்ற சம்பந்தத்தையும் நீக்கி, நீ அதுவாக இருக்கிறாய் என்பதனை "தத்வம் அஸி" என்ற கூற்றால் அறிகின்றோம்.

ஜீவன் பரிச்சின்னமாக இருக்கிறான். அதாவது இடத்தாலும் காலத்தாலும் பொருளாலும், வரையறுக்கப் பட்டவனாக இருக்கிறான் என்பதையும், இறைவன் பரோக்ஷமாக இருக்கிறான் என்பதையும், மாயை இருக்கிறது என்ற எண்ணத்தையும் நீக்கி, எந்த விதமான குற்றமில்லாத ஏகரஸமான சச்சிதானந்தமாக நான் இருக்கிறேன். உண்மையில் எனக்கும் அவனுக்கும் வேற்றுமையில்லை.

கடலில் உள்ளது முழுவதும் எப்படி ஏகரஸமாகிய தண்ணீரோ அதுபோலவே நானும் அவனும் ஒன்றே. சுத்த சைதன்யம் இறைவனுக்கும் ஜீவனுக்கும் அதிஷ்டானம், உபாதிகள் வேறுபடுகின்றன. உபாதிகள் அழியக்கூடியவை. உபாதிகளை நீக்கி சைதன்ய திருஷ்டியில் ஐக்யம் தெரிந்து கொள்ள வேண்டும்.

சைதன்யம்தான் ஸாரம். அது அகண்டரஸம். பூர்ண ரஸம் எனப்படுகின்றது. ப்ரஹ்மம் சிறியது. பெரியது என்ற வரையறையில்லாத பரம்பொருளாகும். அணுவிலும் அணுவாக. பெரியதிலும் பெரியதாக இருக்கிறது என்று கூறுவதெல்லாம் முழுமைத் தன்மையை புரிய வைப்பதற்குத்தான்.

வாக்கிற்கு எட்டாததை வாக்கினால் புரியவைக்க முயலுகிறோம். அது காலத்தைக் கடந்தது. காலத்திற்குச் ஸாக்ஷியாக இருப்பது

அவனுடையவனாக நீ இருக்கிறாய் என்பது த்வைதம். அவனிடத்தில் நீ இருக்கிறாய் என்பது விசிஷ்டாத்வைதம். அவனாகவே நீ இருக்கிறாய் என்பது அத்வைதம். உனக்கும் ப்ரஹ்மத்திற்கும் வேற்றுமை இருப்பதாகக் கொள்வாயானால் பிறவிப் பிணியினின்று நீங்க இயலாது என்பதே வேதாந்தத்தின் கோட்பாடாகும். பரம்பொருள் பூரணன். ஜீவன் பூரணன் அல்ல என்றால் பரம்பொருளுக்குப் பூரணத்தன்மை பொருந்தாது. விசாரணை செய்து பார்த்தால் அவனே நான் என்பது புலப்படும்.

நான் பூரணமான ப்ரஹ்மம் என்று யாருடைய அருளால் புரிந்து கொண்டேனோ அவரை வணங்குகின்றேன்.

உபசாந்தஜகஜ்ஜீவசிஷ்யாசார்யேச்வரப்ரமம் ।
ஸ்வத: ஸித்தமநாத்யந்தம் பரிபூர்ணமஹம் மஹ: ॥

(ச்லோகம்-27)



நான் முற்றிலும் முழுமைப்பொருள். யாண்டும் நிலைத்த பொருள். எந்த சார்பும் அற்றவன். தோற்றமும் முடிவுமற்றவன். மாயத் தோற்றங்களாகிய உலகம், உயிர், சீடன், ஆசிரியன், இறைவன் இவையனைத்தையும் ஒடுக்கிய (அறிவால் பொய்யென்று உறுதி செய்து கொண்ட தூய உணர்வாகிய) பேரொளி வடிவினன்.

ஜீவன், இறைவன், சீடன், குரு ஆகியோரும் மித்யா (தோற்றங்களே) எனப்படுகின்றன.

ஜீவன், ஈஸ்வரன், சீடன், குரு என்ற இந்த நிலைகளெல்லாம் மித்யா என்று புரிந்து கொள்ள வேண்டும் என்று கூறுகின்றார். இது வித்யா மாயை எனப்படுகிறது. அதர்மமான உலகியல் வாழ்வு அவித்யா மாயை எனப்படும். அறிவுக்கு மாத்திரம் பொய்யாகவும், அனுபவத்திற்கு உண்மையாகவும் இருப்பது மித்யா எனப்படுகிறது. வ்யவஹாரத்தில் உண்மையாகவே இருக்கும். எனவே இவை வ்யாவஹாரிக ஸத்யம், பாரமார்த்திக மித்யா என்றும் சொல்லப்படுகின்றன.

உறக்கத்தில் நான் ஆசிரியனாகத் தூங்கிக் கொண்டிருக்கிறேன். சீடனாகத் தூங்கிக் கொண்டிருக்கிறேன். படித்தவனாகத் தூங்கிக் கொண்டிருக்கிறேன் என்பது இல்லை. ஜீவன் முக்த நிலையில் இவைகள் அறிவால் நீக்கப்படுகின்றன.

ஜீவன் முக்தி என்பது ஞானம் பெற்ற பின்னரும் வாழ்ந்திருக்கும் நிலையைக் குறிக்கின்றது. வ்யாவஹாரிக நிலையில்



அனுபவிக்கப்படும் இவ்வுலகம் விதேஹ முக்தியில் அனுபவத்தாலும் நீங்கிவிடுகிறது. ஜீவன் முக்த நிலையில் இன்ப துன்பங்கள் இருக்கும். ஆயினும் ஞானம் இருப்பதால் அவை தாக்குவதில்லை. ப்ராரப்த கர்மத்திற்கேற்ப வாழ்வு நீடிக்கிறது.

இந்நிலையில் கண்ணுக்கு உண்மையான கானல் நீர் போன்று அறிவுக்குப் பொய்யாகின்றன. ஜீவன் முக்தியில் அறிவால் ஒடுக்கப்பட்டவை, விதேஹ முக்தியில் மரணத்தால் ஒழிந்து போகின்றன. இடத்தாலும் காலத்தாலும் பொருளாலும் வரையறுக்கப்படாத முழுமையான பொருளாக நான் இருக்கிறேன். மாசற்ற சோதியாக நான் இருக்கிறேன்.

**லக்ஷ்மீதரகவே: ஸூக்தி சரதம்போஜஸம்ப்ருத: |**
**அத்வைத மகரந்தோ஽யம் வித்வத்ப்ருங்கைர்நிபீயதாம் ||**

(ச்லோகம்-28)

லக்ஷ்மீகர கவியினுடைய சரத்கால தாமரைகளிலிருந்து (உபநிஷதங்களிலிருந்து) உருவாக்கப்பட்ட அத்வைத மகரந்தமாகிய இரண்டற்ற பரம்பொருளைப்பற்றிய கருத்துக்களாகிய தேனானது அறிவாளிகளாகிய வண்டுகளால் நன்கு பருகப்படட்டும். குருவின் அருளால் இந்நூலைப் படிப்பவன், சரத் காலத்தில் தோன்றுகின்ற தாமரையாகிய உபநிஷதக் கருத்துக்களை தாங்கியிருக்கின்ற அத்வைத மகரந்தமாகிய இந்நூலில் நன்றாகச் சொல்லப்பட்ட இக்கருத்துக்களை பருகிக் கொண்டே இருப்பவனாகுக.



"நான் யாண்டும் இருக்கிறேன். எனக்குத துவக்கமும் முடிவும் இல்லை. நான் காலத்தைக் கடந்தவன். இடத்தாலும் பொருளாலும் வரையறுக்கப்படாத பரிபூரண முழுமையான பொருளாக நான் இருக்கிறேன். மாசற்ற ஜோதியாக நான் இருக்கிறேன்" என வரும் ஐப்பசி, கார்த்திகை ஆகிய சரத் காலத்துத்தாமரைபோன்ற உபநிஷதக் கருத்துக்களைக் கொண்டுள்ளது இநத் அத்வைத மகரந்தம் என்னும் நூல்.

நான் ப்ரஹ்மம் என்று இந்நூல் சொல்லப்பட்ட கருத்துக்களை சந்தேகம் பரிபூரணமாக நீங்கும் வரை சிந்திக்க வேண்டும். எனவே திரும்பத் திரும்பப் படிக்க வேண்டும் என்று கூறுகின்றார் இந்நூலாசிரியர்.

படிப்பதால் பரோக்ஷஞானம்தான் வரும். அதனைக் கடைப்பிடிப்பதால்தான் அபரோக்ஷஞானம் வரும் என்று கூறுவாருமுளர். அதற்குச் சான்றாகச் சர்க்கரை என்று கூறுவதால், இனிப்பைச் சுவைக்க இயலாதென்றும், சர்க்கரையை உண்டால்தான் சுவைக்க முடியுமென்றும் கூறுவர்.

பரோக்ஷம் என்பது தெரியாதது. அபரோக்ஷம் என்பது தெரிந்தது. நான் என்பது அபரோக்ஷம். சர்க்கரை பரோக்ஷம். சார்கரையை சாப்பிடும்போது மட்டும் அபரோக்ஷம் கிடைக்கிறது. ஆத்மா நித்ய அபரோக்ஷ ஸ்வரூபம். என்னை நான் எப்போதும் உணர்ந்து கொண்டிருக்கிறேன். எனவே இந்த எடுத்துக்காட்டு பொருந்துவதாக இல்லை.



அபரோக்ஷமாக இருக்கின்ற ஆத்மாவைப் பற்றித்தான் உபநிஷதம் உபதேசம் செய்கிறது. எனவே படிப்பதே அபரோக்ஷ ஞானம்தான். நான் ப்ரஹ்மமாக இருக்கிறேன் என்பதில் முதற்கண் ஐயம் இருக்கலாம். அந்நிலை ப்ரதிபந்தத்தோடு கூடிய ஞானமாகும்.

மனனம் அதாவது சிந்தித்து, நிதித்யாஸனம் அதாவது அந்த ஞானத்தில் நிலைத்திருந்து ப்ரதி பந்தத்தை நீக்க வேண்டும். திரும்பத்திரும்பப் படித்தறிதல் வேண்டும். உடல், மனம் போன்றவற்றைக் காட்டிலும் மிகவும் அபரோக்ஷமாக இருக்கும் ஆத்மாவைப்பற்றியே உபநிஷதங்கள் கூறுகின்றன. இப்பிறவி பரிபூரண பலனை உடையதாக வேண்டுமானால் இக்கருத்துக்களைப் பற்றிய அறிவு வேண்டும்.

பகவான் கீதையிலும் க்ஷேத்ர, க்ஷேத்ரக்ஞனைப்பற்றிய ஞானமே அறிய வேண்டிய ஞானமாகு மென்பதனையும், "அறியத்தக்கது எது, எதை அறிந்த ஒருவன் சாகாத்தன்மை எய்துகிறான், அதைப்பகர்கிறேன். அது ஆதியில்லாத ப்ரஹ்மம்" என்று கூறுதலும் இங்கு நினைக்கத்தகும். எதை அறிந்தால் பிறப்பில்லையோ அதை அறிய வேண்டும். உலகில் விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப பல்வேறு துறைகளைப்பற்றிய அறிவை வளர்த்துக் கொள்வது குற்றமன்று. ஆயினும் எவ்வாறு வாழ்வது என்பது பற்றிய அறிவைப் பெறுவதும், ஆத்ம ஞானத்தின் தன்மையைப் பற்றிய உண்மையை அறிவதும் இன்றியமையாதது. வேதாந்தம் இவ்வுண்மையை நன்கு விளக்குகிறது.



## நிறைவுரை

"நான் அதுவாயிருக்க நீ செய் சித்ர மிக நன்று காண்" என்றார் தாயுமானவர். இக்கூற்றுக்கு விளக்கம் தருவது போல் அத்வைத மகரந்தம் அமைந்துள்ளது

"தத்வம் அஸி" நான் அதுவாக இருக்கிறேன் என்ற கருத்தை பல்வேறு சான்றுகளுடன் நிறுவுகின்றது. நான் சச்சிதானந்த ஸ்வரூபமாக இருக்கின்றேன். எனக்குத் துவக்கமும் முடிவும் இல்லை. அனைத்தையுமறிகின்ற ஸர்வகாரணமாகிய பரம்பொருள் நான்.

நான் காலத்தாலும், இடத்தாலும் வரையறுக்கப் படாதவனாக இருக்கிறேன். எனக்கு எக்காலத்திலும் அழிவில்லை. நான் யாண்டும் இருப்பவன். நான் எங்கும் நீக்கமற நிறைந்தவன். நான் உடல், மனம், புத்தி, ப்ராணன் அல்ல. செயல்படும் தன்மையாகிய அஹங்காரமும் அல்ல. ஆத்மா நிர்விகார ஸ்வரூபம். ஆத்மாவில் ஒருபொழுதும் அறியாமை இல்லை.

மாயை, அறியாமை என்பன "அநிர்வசநீயம்" விளக்க முடியாதவை. உலகக் காட்சிகள் அனைத்தும் மாயத்தோற்றங்களே. நான் அமுதக் கடல், ஸ்படிக மலை போன்றவன். ஸாக்ஷி என்ற தன்மையும் எனக்கில்லை. இனமோ, குணமோ புறத்திலிருந்து வரும் இன்பமோ அற்ற ப்ரஹ்மமே நான். இருப்பாக, உணர்வாக, ஆனந்தமாக இருக்கும் சச்சிதானந்த ஸ்வரூபமே நான்.



ஒரே சைதன்யமாக ஏகரஸமாக நான் இருக்கிறேன். இவ்வாறு ஆத்மாவைப் பற்றிய உண்மைகளை அத்வைத மகரந்தமாகிய இந்நூல் எடுத்துரைக்கின்றது. ஆத்மாவைத் தெரிந்து கொள்ளாமல் முக்தியில்லை என்பதும் வேதாந்தக் கோட்பாடு. ஆத்மாவைப்பற்றிய அறிவுதான் துன்பமில்லாமல் வாழ உறுதுணையாகின்றது. ஸம்ஸாரம் எனப்படும் பிறவிப்பிணி நீங்குதற்குரிய ஒரே மருந்தாக இந்த ஞானம் தான் அமைந்துள்ளது. அத்வைத தத்துவம் உலகியல் வாழ்வில் மக்கள் தம் துன்பங்களை அறவே நீக்கும் அருமருந்தாக அமைந்துள்ளமை சிந்திக்கத்தக்கது.

இவ்வுலகம் மேலெழுந்தவாரியாக இன்பத்தையும் ஆழ்ந்த துன்பத்தையும் தருவதாக உள்ளது. நாம் அனுபவிக்கும் இன்பமும், துன்பமும் நமது உள்ளத்தைத் தாக்குகின்றன. அவற்றினின்று மீள்வதற்காக, அவற்றை மறப்பதற்காக மற்றொரு பொருளை நாடுகிறோம்.

வேறு ஒரு பொருளை நாடி அதன் வாயிலாக உள்ளம் இன்பமும் மன அமைதியையும் பெறும் எனக் கருதி அதனைப் பற்றிக் கொள்கின்றோம். அந்த மற்றொரு பொருள்தான் நம் அனைவரால் போற்றப்படும் இறைவன்.



இறையருளை நாடி, இறையன்பில் தோய்ந்திருக்கும்போது ஓரளவு மன அமைதியைப் பெறுகின்றோம். இது சமய நெறியாகும். வேதாந்த தத்துவம் எதுவரையிலும் இவ்வுலகையும்

மனதையும் உடலையும், இறைவனையும் வேறான, வேற்றுமையான பொருட்களாக நினைக்கின்றாயோ அதுவரையிலும் உண்மையான மன அமைதியைப் பெற இயலாது என்று கூறுகின்றது.

"நாந்ய: பந்தா வித்யதேSயநாய"
"உதரம் அந்தரம் குருதே அத தஸ்ய பயம் பவதி"

இறைவனுக்கும் ஜீவனுக்கும் உலகத்திற்கும் உள்ள வேற்றுமையை எவன் உண்மை என்று எண்ணுகிறானோ அவன் மீண்டும் மீண்டும் பிறவிக்கடலில் விழுகின்றான். நன்கு ஆராயாதவரை இந்த வேற்றுமை அனுபவங்கள் முற்றிலும் உண்மை என்று தோன்றும்.

முறையாக ஆராய்ந் தோமானால் உண்மையில் வேற்றுமை என்பது இல்லை என்பதனை அறியலாம். வேற்றுமை என்பது ஒரு மாயத்தோற்றமே என்பது புலனாகும்.

சிதாகாசமாகிய என்னிடத் திருந்துதான் மாயையினால் கனவில் காணப்படும் காட்சிகளுக்கு நிகராக, மேகத்தில் காணப்படும் நகருக்கு நிகராக இவ்வுலகம் தோன்றுகிறது. மயாத்தோற்றத்தை மாபெரும் உண்மை என்று எண்ணு வோமானால் பிறவிச் சுழலிலிருந்து விடுபட இயலாது. மாயத் தோற்றத்தை ரஸிக்கலாம். ஆனால் மயங்கிப் போய் அதனை உண்மை என்று நம்பிடலாகாது.

கானல் நீர் எப்படி கண்ணுக்கு மெய்யாகவும் அறிவுக்குப் பொய்யாகவும் தோன்றுகிறதோ அதுபோன்று நாம் அனுபவிக்கும் இவ்வுலகமனைத்தும், அனுபவத்திற்கு



உண்மையாகவும், வேதாந்த முறைப்படி பெற்ற அறிவுக்குப் பொய்யாகவும் இருக்கிறது. இருப்பது ஒரு பொருளே, அந்த ஒரு பொருள் நானே என்பது வேதாந்தத்தின் கருத்தாகும்.

“மத்தரப்பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி” எனக்கு வேறாக சிறு அணுவும் இல்லை. அனைத்துப் பொருள்களிலும் ஸத் ஸ்வரூபமாகவும், சித் ஸ்வரூபமாகவும், ஆனந்த ஸ்வரூபமாகவும் நான் விளங்கிக் கொண்டிருக்கிறேன்.

தம:ப்ரதான ஜடப்பொருள்களில் ஸத் ஸ்வரூபம் மட்டுமே வெளிப்படுகிறது. சிறிது ஸத்வம் கலந்த ரஜ: ப்ரதான ஜடப் பொருள்களில் சைதன்யம் வெளிப்படுகிறது. ரஜஸ் குறைந்த ஸத்வ ப்ரதான ஜடப்பொருள்களில் ஆனந்தம் வெளிப்படுகிறது.

அனைத்து ஜடப்பொருள்களிலும் சச்சிதானந்தம் இருப்பினும், அந்தந்த பொருள்களின் தன்மைக்கேற்ப ஆதாரமாக இருக்கின்ற அந்தப் பொருளின் ஒரு சில அம்சங்களைத்தான் வெளிப்படுத்துகின்றன. உண்மையில் ஜடமாகிய மாயை என்பது தோற்றமே. சச்சிதானந்த ஸ்வரூபமே உண்மை.

இறைவனையும் நம்மையும் வேறுபடுத்தி, நம்மையும் அவனையும் குறைபாடுடைய வர்களாக்கலாகாது. வேற்றுமைப்படுத்து வோமானால் அவனது முழுமைக்கு குறை ஏற்படும். அவன் முழுமையானவன், பூரணமானவன் என்பது உண்மையானால் அவன் நமக்கு வேறாகவும் இருக்க இயலாது



வேதாந்தம் ஜீவாத்மனையும் பூரணன் என்று கூறுகின்றது. எனவே இரண்டு பூரணங்கள் இருக்க முடியாததால் இறைவனும் நானும் ஒன்றே. பூரணத்திலிருந்து பூரணம் தோன்றியிருக்கிறது. பூரணத்திலிருந்து பூரணத்தை எடுத்த பின்னரும் பூரணமே எஞ்சியிருக் கிறது. இக்கருத்தை கீழ்வரும் எடுத்துக்காட்டு வாயிலாகவும் விளக்கலாம்.

தரையில் இருந்த கயிறு ஒன்று பாம்புபோல் காணப்பட்டது. கயிறும் பூரணம், அக்கயிற்றின் மீது தோன்றிய பாம்பும் பூரணம். கயிறு எவ்வளவு நீளமாக பருமனாக இருக்கிறதோ, அதே அளவுதான் பாம்பும் காணப்படு கிறது. பூரணமாகிய கயிற்றில் பூரணமாகிய பாம்பு தோன்றியிருக் கிறது. பூரணமாகிய கயிற்றிலிருந்து பூரணமாகிய பாம்பை அறிவினால் நீக்கிவிட்டால் பூரணமாகிய கயிறே எஞ்சியிருக்கிறது. அது போன்று பரம்பொருளும் பூரணம். அதனிடத்து தோன்றியுள்ள தோற்றங்களும் பூரணம்.

பரம்பொருளாகிய பூரணத்திலிருந்து தோற்றங்களாகிய பூரணமாகிய ப்ரபஞ்சம் உண்டாயிற்று. பூரணமாகிய பரம்பொருளிடத்திருந்த பூரணமாகிய ப்ரபஞ்சத்தை நீக்கினால் பூரணமாகிய பரம்பொருள் ஒன்றே நிலைத்து நிற்கும். பூரணம் ஒன்றுதான் இருக்க முடியும். இரண்டு பூரணங்கள் என்ற கூற்றே குறைபாடுடையது. உபநிஷதம் இவ்வளவு அழகாக இந்த உண்மையை விளக்குகிறது.

நான் அத்வைத ஸ்வரூபன். பரிபூரண சச்சிதானந்த ஸ்வரூபன் அனைத்திற்கும்



ஆதாரமாக இருப்பவன். பிறப்போ, இறப்போ எனக்கு ஒரு பொழுதும் இருந்ததுமில்லை. இப்போதுமில்லை. இனி இருக்கப் போதுமில்லை.

ஜாதி, குலம், பிறப்பு, இறப்பு, பந்தம், அருவுருவத்தன்மை, நாமம் முதலியன ஏதுமின்றி எப்பொருளுக்கும் அடிப்படையாய் விளங்குகின்ற பூரணமாய் நான் இருக்கிறேன். "சிதானந்த ரூபம் சிவோஹம் சிவோஹம்", "அஹம் ப்ரஹ்மாஸ்மி" நான் ப்ரஹ்மமாக இருக்கிறேன் என்பதே வேதாந்தம் கூறும் உண்மை நிலையாகும்.

ஜீவப் ப்ரஹ்ம ஐக்யம் ஞானம் ஒன்றே முற்றிலும் துயரங்களை நீக்கக் கூடியதாகும். அறியாமையால் பேரானந்த வடிவமாகிய நம்மை மறந்து உலகப்பொருள்களில் அந்த ஆனந்தத்தைத் தேடுகிறோம். "ஞானாதேவது கைவல்யம்" என்பது மறைமொழி. அறிவால் மட்டுமே மனிதன் துயரங்களை முற்றிலும் கடக்க முடியும். பிறப்பென்றும் பேதமை நீங்க சிறப்பென்னும் செம்பொருளை அறிதல் வேண்டும்.

வேதாந்த சாஸ்த்ரப்படி பிறப்பும், வாழ்வும், மரணமும் கூடத் தோற்றம்தான். ஆத்ம ஸ்வரூபமாகிய நமக்குப் பிறப்போ, வாழ்வோ, மரணமோ இல்லவே இல்லை. இவ்வுலக வாழ்க்கையே ஒரு மாயத்தோற்றம். இது அறிவுக்கு ஒத்த உண்மை. தகுந்த உத்திகளோடும், சாஸ்த்ரக் கருத்துக்களோடும் நாம் ஆழ்ந்து சிந்திப்போமானால் அந்தப் பேருண்மை நமக்கு விளங்கும். உடலும் மனமும் "அஸத்" ஸ்வரூபம். அவை மாறக் கூடியவை. ஒடுங்கக் கூடியவை.



உடலையும் உலகையும் உண்மை எனக் கருதுவோமானால் உண்மையான அமைதி நமக்கில்லை. பிறந்து வளர்ந்து தேய்ந்து அழிந்து போகக் கூடிய உடல் அன்று நான். ஓயாது மாறிக் கொண்டிருக்கின்ற எண்ணங்கள் அன்று நான். மாறுகின்ற அவைகளுக்குச் ஸாக்ஷியாக விளங்குகின்ற ஸத்ஸ்வரூபம் நான். நான் இருப்பாக இருக்கிறேன். மனமும், உடலும் இருப்பவைகள். இருப்பவைகள் ஒரு தோற்றம். இருப்பே உண்மை.

அலை என்ற பெயரும் கடல் என்ற பெயரும் நீரின்மேல் கற்பிக்கப்பட்டிருப்பது போல இவ்வுலகில் உயிர்கள் என்ற பெயரும் இறைவன் என்ற பெயரும் பரம்பொருளின் மீது மாயையால் கற்பிக்கப்பட்டிருக்கின்றன.

பரம்பொருளே யாண்டும் உண்மை. அந்தப் பரம்பொருள் நானே என்பது அத்வைத தத்துவம் புகட்டும் நெறியாகும்.

இவ்வுலகில் பல்வேறு கலை ஞானங்களைப் பற்றி அறிந்து கொள்ளும் மனிதன் தன் வாழ்க்கையைப் பற்றிய உண்மையை அறிந்து கொள்ளாமல் இருப்பது இரங்கத்தக்கது. உண்மையில் நாம் யார் என்ற சிந்தனை வேண்டும்.

**"உன்னை நீ அறிவாயாகில் உனக்கொரு கேடுமில்லை என்னை நீ கேட்டதால் ஈது நான் உபதேசித்தேனே"**

என்று கைவல்ய நவநீதம் கூறுகின்றது.



திருமூலரும்

"தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்த பின்
தன்னையே அர்ச்சிக்கத்தான் இருந்தானே"

என்பார்.

தன்னைப் பற்றிய உண்மையை மனிதன் அறிந்து கொள்ள வேண்டும். அதை அறிந்து கொண்டவனுக்கு வாழ்க்கையில் துன்பமில்லை. தன்னைப் பற்றி அறிந்து கொள்ளும் அறிவைப் பெறுதல் இன்றியமையாதது. அந்த அறிவைப் பெற்றவன் தானே வணங்குதற்குரிய பெரிய பொருளாக இருக்கும் நிலையை அறிவான். இக்கருத்துக்களை மிகச் சுருக்கமாகத் திருவள்ளுவர் கூறுவதும் நினைக்கத்தகும்.

"யான் எனது என்னும்செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்" என்றார்.

நம் வாழ்வைப்பற்றிச் சிந்திக்குமிடத்து, சில நேரங்களில் இன்பம் இருப்பது போல் மகிழ்கின்றோம். அடுத்து, துன்பங்கள் வந்து தாக்கும்போது துன்புறுகின்றோம். இவ்வாறு இன்ப துன்பங்களோடிணைந்த வாழ்வின் இறுதியாக மரணம் வந்தமைகிறது.

வாழ்க்கையைப் பற்றிய உண்மையையும், இன்ப துன்பங்களின் உண்மையான தன்மையையும், உண்மையில் நாம் யார் என்பதனையும் அறிந்துகொள்ள வேதாந்த சாஸ்த்ரம் உறுதுணையாகின்றது. அத்வைத மகரந்தமாகிய

இந்நூல் நம்மைப்பற்றிய உண்மையை, "நான் ப்ரஹ்மமாக இருக்கிறேன்" என்ற கருத்தை பல்வேறு சான்றுகளுடன் நிறுவுகின்றது.

எனவே, வாழ்வில் அறிந்து கொள்ள வேண்டிய பேரறிவைப் புகட்டும் பெருமைக்குரிய நூலாகத் திகழ்கின்றது. கற்றறிந்து, சிந்தித்துத் தெளிந்து, பயன் பெறுவோமாக.

- ஓம் -

